பக்கங்கள்-16 22.ஆவணி.2021 விலை-30.00





# தினப்புயல்

PTN news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –352




## கொரோனா மரணங்களை கட்டுப்படுத்த தவறிய கோட்டாவின் குடும்ப அரசியல் – நடப்பது என்ன?






## அமெரிக்க படைகளின் வெளியேற்றமும் தலிபான்களின் வெற்றியும்



## கொரோனா வைரஸின் தாக்கத்தினால் வீழ்ச்சி கண்டுள்ள இலங்கை பொருளாதாரம்

# கொரோனா மரணங்களை கட்டுப்படுத்த தவறிய கோட்டாவின் குடும்ப அரசியல் – நடப்பது என்ன?



கொரோனா வைரசின் தாக்கம் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு இரு வருடங்களை அண்மித்துள்ள நிலையில் இதுவரையில் இந்நாட்டில் கொரோனாவினைக் கட்டுப்படுத்த கோட்டபாய ராஜபக்சவின் குடும்ப அரசியல் தவறியுள்ளது என்பது பலரது குற்றச்சாட்டாக விருப்பினும் அதுவே இன்றைய உண்மையும் கூட.

நாட்டை முடக்குவதன் ஊடாக கொரோனாவினைக் கட்டுப்படுத்த முடியும் என்கிற நிலைப்பாட்டை அன்றே தெரிந்திருந்தும் அலட்சியப்போக்கிலும் நிதிப்பற்றாக்குறையினாலும் தமது அரசாங்கம் வீழ்ச்சியடையாது அதனை சரிசெய்வதற்காகவே அரசாங்கம் இந்த காலகட்டத்தில் அரசியல் ரீதியான முடிவுகளைஎட்டியதேதவிர கொரோனா வைரசினுடைய தாக்கம் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிப்படைவார்கள் என்றும். ஆறாயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழுப்பார்கள் என்றும் அரசாங்கம் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

அன்று அரசு நாட்டை முடக்கியபோது நாட்டைத் திறந்துவிடுங்கள் என்று அரசிடம் கோரிக்கைவிடுத்த அதே தரப்பினர் இன்று மகா சங்கத்தினர், சுகாதாரத் துறையினர், அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள் நாட்டை உடனடியாக முடக்குமாறு கூறிய நிலையில் அரசாங்கத்தினால் மக்களை எதிர்த்து எதுவும் மேற்கொள்ளவியலாத ஒரு சூழ்நிலையில் 20.08.2021 தொடக்கம் 30.08.2021 வரை நாட்டில் சுயதனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இவ்விடயம் வரவேற்கத்தக்கதாகவிருக்கின்றபோதிலும் ஆரம்பத்தில் இந்நாட்டினை முடக்கியிருந்தால் பொருளாதார ரீதியாக முன்னேற்றத்தையும், மரணங்களைத் தடுக்கும் விதத்திலும் செயற்பட்டிருக்க முடியும். தற்போதைய சூழ்நிலையில் நாடு முடக்கப்பட்டிருக்கும் நிலையில் மக்களுக்கான நிவாரணங்களை யார் வழங்குவது? 60 விகிதமான மக்கள் கூலித்தொழில் அல்லது விவசாயம் செய்பவர்கள். 40 விகிதமானவர்களே அரசாங்கத்தில் பணியாற்றுபவர்கள். நாடு முடக்கப்பட்டாலும் அரச பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கவேண்டிய தேவை உள்ளது. அதேநேரம் மக்களுக்கும் நிவாரணப்பொருட்களை வழங்கவேண்டிய தேவை உள்ளது. இதற்கு ஈடுகொடுக்கவே மீண்டும் இந்த அரசாங்கம் சீனாவிடம் கையேந்தியுள்ளது. நிலைமை இவ்வாறிருக்கின்றபோதிலும் சீனாவிடமிருந்து தடுப்பூசிகள் வரவழைக்கப்படுகின்றன. இலங்கையில் ஒட்டுமொத்த மக்களுக்கும் இதுவரையிலும் தடுப்பூசிகள் வழங்கப்படவில்லை. சிறுவர்களுக்கு இன்னமும் வழங்கப்படவில்லை. தனிமைப்படுத்தல் முறைகளில் தவறுகள் ஏற்பட்டிருக்கின்றது. தனிமைப்படுத்தியவர்களும் வீடுகளில் இருந்து இரவு நேரங்களில் வெளியில் செல்கிறார்கள். இதனாலேயே சமூகப் பரவல் மிகத் தீவிரமடைந்தது. இன்று பார்க்கின்றபோது நாட்டில் அனைத்துப் பாகங்களிலும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

நாளொன்றுக்கு நூறுக்கும் மேற்பட்டோர் கொரோனாவின் தாக்கத்தினால் மரணிக்கின்றார்கள். சுகாதாரத்துறையும் வைத்தியர்களும் கைவிரித்த நிலையில் இன்று அரசாங்கம் நாட்டை முடக்குகின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. தொடர்ந்தும் அரசியலில் தமது நிலைப்பாடுகளை மாற்றிக்கொள்ளாத வகையிலும் அரசாங்கத்தினால் இந்நாட்டை திறம்பட நிர்வகிக்க முடியாது.

தமிழினத்திற்காக குரல் கொடுக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது கோரிக்கைகளை கோட்டபாய ராஜபக்ச தலைமையிலான அரசிடம் முன்வைத்தபோதிலும் அவைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்ட நிலையிலும் இன்றுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவில்லை. அரசாங்கம் இந்த நாட்டினை முடக்காதபோதும், வடக்கு கிழக்கு மக்கள் தாமாக முன்வந்து நாட்டை முடக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். குறிப்பாக இந்த நடவடிக்கைகளை வர்த்தக சங்கத்தினருடன் இணைந்தே மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் ஒரு சில வர்த்தக சங்கங்கள் அப்படி அதனை செயற்படுத்த முடியாது என வாக்குவாதங்கள் இடம்பெற்றநிலையில் தான் மக்கள் இன்று சக்தியாக ஒன்றுதிரண்டு இந்த நாட்டினை முடக்குவதற்கான சந்தர்ப்பத்தினை அரசிற்கு பெற்றுக்கொடுத்துள்ளார்கள்.

நாட்டை முடக்க முடியாது என்று நாட்டின் ஜனாதிபதி கூறிவந்த நிலையில் மக்கள் சக்தியாக இன்று நாட்டின் துறைசார் சம்பந்தப்பட்டவர்களின் அழுத்தம் காரணமாகவும். மகாநாயக்கர்களின் அழுத்தம் காரணமாகவும் இன்று ஜனாதிபதி கோட்டபாய அவர்கள் நாட்டை பத்து நாட்களுக்கு முடக்கியுள்ளார். இந்த நிலையில் பத்து நாட்களுக்கான நிவாரணம் என்ன? இதனை யார் முன்னெடுக்கப்போகிறார்கள். அத்தியாவசிய சேவைகளை எவ்வாறு பெற்றுக்கொள்வது? சாதாரண நோயாளர்களுக்கான சிகிச்சையினை எவ்வாறு வழங்குவது? என்பது ஒரு முக்கியமான விடயமாக காணப்படுகிறது. அதற்கான முதலுதவி நடவடிக்கைகள் அரசினால் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. ஆனாலும் நாட்டில் மக்கள் நடமாட முடியாத அளவிற்கு நிலைமைகள் மோசமடைந்துள்ளது.

மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் தொற்றுக்கு உள்ளாகிறார்கள். நாளாந்த மரணங்களின் எண்ணிக்கை 200ஐ நெருங்கியுள்ளது. இந்நிலையில் யார் யாரைக் காப்பாற்றுவது என்கிற நிலையில் நோய்த்தொற்றுக்குள்ளாவோர் வீட்டிலேயே தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்தினுடைய முன்னேற்பாடுகள் கடந்த கால அலைகளிலும் கோட்டைவிடப்பட்டது. ஆனால் முதலாம் அலையின் போது சுகாதாரத் துறையின் நடவடிக்கைகள் வெற்றியளித்தது. உலகளவில் பல்லாயிரக்கணக்கான இறப்புக்கள் நிகழ்ந்து கொண்டிருக்க, இலங்கையில் கொவிட் தாக்கம் காரணமாக ஆரம்பத்தில் 05 நபர்கள் கூட மரணிக்கவில்லை. அதன் பின்னர் கொரோனா வைரசினைக் கட்டுப்படுத்துவதற்கான விசேட செயலணி ஒன்று ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து இன்று கொரோனா வைரசினுடைய நான்காம் அலையில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மரணமடைந்துள்ளார்.

இப்படியிருக்க இவர்களின் குடும்ப அரசியல் இந்த நாட்டை சீர்குலைத்தது மட்டுமன்றி சீன நாட்டின் அடிமைகளாக மகிந்த குடும்பம் மாறியிருப்பது மீண்டும் இந்த நாட்டை பொருளாதார ரீதியாகவும் ஏனைய கட்டமைப்பு ரீதியாகவும் நலிவடையச்செய்கின்ற ஒரு செயற்பாடாகவே இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள் உற்றுநோக்கப்படுகின்றது. இராணுவத்தின் சக்தி கொண்டு கொரோனா வைரசினை கட்டுப்படுத்த முடியும் என்கின்ற ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவின் இறுமாப்பு இன்று முறியடிக்கப்பட்டுள்ளது.

ஆகவே சுகாதாரத் துறையினரின் உதவியின்றி எவராலும் இந்த கொரோனா வைரசினுடைய தாக்கத்தை கட்டுப்படுத்த முடியாது என்பது உறுதியாகியுள்ளது. வைத்தியத்துறையினை சுயமாக இயங்க அரசு அனுமதிக்கவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களது இயல்பு வாழ்க்கையினையும் அவர்களுக்கான நிவாரணப் பணிகளையும் அரச தரப்பு துரித கதியில் மேற்கொண்டால் ஏனைய நடவடிக்கைகள் அனைத்தும் சீரான முறையில் முன்னெடுக்கப்படும். இதற்கிடையில் இந்த நாட்டில் அரசாங்கத்திற்கு எதிராக அதிபர் மற்றும் ஆசிரியர் போராட்டம், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டம் என முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், இப்போராட்டங்களில் பங்கெடுத்தவர்களுக்கும் கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஒரு அரசாங்கம் என்பது அந்நாட்டு மக்களை சுயநிர்ணய உரிமையுடன் பாதுகாக்கின்ற நடவடிக்கைககளில் ஈடுபடுகின்ற போதுதான் குறித்த அரசாங்கம் நிலைத்து நிற்கும். ஆனால் இந்த அரசாங்கமோ தொடர்ந்தும் அரசியல் பழிவாங்கல்களை செய்துவருகிறது. இந்த அரசியல் பழிவாங்கல் என்பது தொடர்ந்தும் மூவின மக்களிடையே குரோதங்களை தோற்றுவிக்கும் நிலைமையினைக் கொண்டுள்ளது. குறிப்பாக இலங்கையரசு சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் கைதிகள் தொடர்பிலும் அக்கறை செலுத்த வேண்டும். நெருக்கமான வதிவிடங்களினால் அங்கு பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக்காணப்படுகின்றது.

ஆகவே அரசாங்கம் பிசிஆர் பரிசோதனைகளை உடனடியாக கிராமங்கள் தோறும் மேற்கொள்ளவேண்டும். தடுப்பூசிகளது பக்கவிளைவுகளினாலும் பலர் மரணமடைந்திருக்கிறார்கள் எனக் கூறப்படுகிறது. அதனது தாக்கம் என்பதும் மாறுபட்டுள்ளது. ஒவ்வாமையின் காரணமாகவும், ஏற்கனவே அவர்கள் நோய் வாய்ப்பட்டிருந்ததாலும் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட இறப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக அரசு கூறுகிறது. 60 வயதிற்கு மேற்பட்டோர் வீடுகளில் இருந்து தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள வேண்டும் என்பது அவசியமாகிறது. ஏனெனில் மரணிப்பவர்களில் அநேகமானோர் இவ்வயதினரே என்பதையும் மக்கள் கவனத்திற் கொள்ள வேண்டும்.

அத்தியாவசிய சேவைகள், விவசாய நடவடிக்கைகள், மருந்தகங்கள், ஆடைத் தொழிற்சாலை போன்றவற்றை அரசாங்கம் இயங்கச்சொல்கின்றது. குறிப்பாக ஆடைத் தொழிற்சாலைகளிலேயே பெரும்பாலானோர் பணிபுரிகின்றார்கள். இந்த ஆடைத் தொழிற்சாலைகளினூடாகவே தொற்றுக்கள் பெரும்பாலும் பரவ வாய்ப்புள்ளது. இவ்வாறு நாட்டில் முடக்கத்தினை ஏற்படுத்திவிட்டு, அபாயகரமான ஆடைத்தொழிற்சாலைகளை செயற்படவிட்டால் பயன் இல்லை. கடந்த காலங்களிலும் ஆடைத்தொழிற்சாலைகள் கொவிட் கொத்தனிகளாக அடையாளம் காணப்பட்டது.

ஆகவே அரசு இந்த விடயங்களையும் கவனத்தில் கொள்ளவேண்டும். குறிப்பாக கோட்டபாய ராஜபக்சவின் குடும்ப அரசியல் என்பது நாட்டுக்கு தொடர்ந்தும் பாதகத்தன்மையினை ஏற்படுத்தியிருக்கின்றது. நாட்டை முடக்கியும் கொரோனா வைரசினை கட்டுப்படுத்த முடியாதுவிட்டால் இலங்கையின் அனைத்துப்பாகங்களிலும் மக்களது இறப்பு விகிதம் அதிகரித்துச்செல்லும். இலங்கையிலும் ஒரு வூஹான் நகரம் உருவாகுவதற்கு, சீனாவோடு கைகோர்த்து நிற்கும் கோட்டபாய ராஜபக்சவின் குடும்பமே காரணமாக அமைவார்கள் என்பது இன்றைய யதார்த்தம். அதேநேரம் சீனாவினுடைய பிடியிலிருந்து அரசாங்கம் தன்னை கொஞ்சம் கொஞ்சமாக விடுவித்துக் கொள்ளவேண்டும். இல்லையேல் பூகோள அரசியலிலிருந்து இலங்கையரசு தன்னை பாதுகாத்துக்கொள்ள முடியாது என்பதே உண்மை.

**–இரணியன்–**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,வவுனியா.

# 156 உலக வரலாற்றில் குறுஞ்சமர்

## பெரும் ஆபத்தில் இலங்கையர்களாகிய நாம் - சுகாதார வழிமுறைகளை பின்பற்றுதல் மிக அவசியம்

இலங்கையை மாத்திரமல்ல முழு உலகையுமே ஸ்தம்பிக்கச் செய்துள்ள இவ் கொடிய கொரோனா என்கிற கிருமியின் தொற்றும் அதனது பல்வேறு திரிபுகளும் இலங்கையில் மிகவும் வேகமாகப் பரவிவருகிறது. டெல்டா என்கிற திரிபின் வேகம் நாடு முழுவதும் பரவியிருக்கக்கூடும் என்கிற அச்சநிலையில், கொழும்பிலும் டெல்டா திரிபுடன் அடையாளம் காணப்பட்டு வருகின்றார்கள்.

கடந்த 24 மணித்தியாலத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 186 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். அதனடிப்படையில் இதுவரையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 55,842 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் மேல் மாகாணத்திற்குள் நுழைய முற்பட்ட 787 வாகனங்களில் பயணித்த 1,437 பேர் பொலிஸ் வீதி தடைகளில் வைத்து சோதனைக்கு உட்படுத்தப்பட்ட தெரிவிக்கப்படுகின்றது. இதன் போது மாகாணங்களுக்கு இடையிலான பயண கட்டுப்பாட்டை மீறிய 191 வாகனங்களில் பயணித்த 471பேர் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள போதிலும் கொவிட் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என இராணுவ தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இப்பெருந்தொற்று காலத்தில் மக்கள் தம்மைத்தாமே சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்திக் கொள்வது மிக மிக அவசியம். அத்தியாவசியமானத் தேவைகளுக்கு மாத்திரமே வீட்டிலிருந்து வெளியில் செல்லுங்கள். உரிய சுகாதார வழிமுறைகளை முறையாகப் பின்பற்றுங்கள். தடுப்பூசிகளை காலதாமதம் இல்லாமல் செலுத்திக்கொள்ளுங்கள். கடமைகளுக்காகச் வெளியல் செல்வோர் மிகவும் அவதானமாக செயற்படுங்கள்.

இதேநேரம் மக்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பின்மை பெரும் தலையிடியாக மாறியுள்ளது. அத்தியாவசியப் பொருட்களை வாங்கு வதற்குக் கூட பணம் நெருக்கடியான நிலையாக உள்ளது உண்மை. வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் அதிகம் உள்ள எமது நாட்டில் மக்கள் அல்லல்படவேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது.

மனிதாபிமானிகள், செல்வம் படைத்தோர் இப்பெருந்தொற்று காலத்தில் உதவி வருகிறீர்கள் என்பது உண்மையில் உங்களுக்கு நன்றி கூறினாலும் போதாது. ஊங்களது இந்த மகத்தான பணி தொடரவேண்டும்.

அரசும் 5000 ரூபாய் என கடந்தகாலங்களில் கொடுப்பனவினை வழங்கியிருந்தது. அதிலும் குறைபாடுகள் கூறப்பட்டது. எனினும் எதிர் வரும் திங்கட்கிழமை 2000 ரூபாய் பணம் வழங்கவிருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. நாட்டினுடைய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், அரச ஊழியர்களுக்கான சம்பளத்தையும் செலுத்தவேண்டிய நிலை அரசிற்கு இருக்கிறது. நாட்டு மக்களுக்கும் உரிய நேரத்தில் தேவையான நிவாரண உதவிகளை செய்யவேண்டிய கடப்பாடும் இருக்கிறது. மிகப் பெரும் ஆபத்தில் சிக்கிக்கொண்டுள்ள இந் நாட்டு மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து சமூகப் பொறுப்புடன் சிந்தித்து செயற்படுவோம்.



பப்ரெக் கர்மெல் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார். அவர் கிட்டத்தட்ட சகல அரசியல் கைதிகளையும் விடுவித்தார். அமீனின் பயங்கரவாதத்திற்குப் பலியானவர்கள் இழந்த உரிமைகளை மீளப் பெற்றுக்கொடுத்தார். மிக அவதானமாகச் சீர்திருத்தங்களை மேற்கொண்டார். இருந்த போதும், மக்கள் அவரை சோவியத் வழிகாட்டிகளினதும் கட்டளையாளர்களினதும் கையிலுள்ள வெறும் கைப்பொம்மை என்றே கருதினர். ஆரம்பிக்கப்பட்டு, ஏதோ ஒரு காலப்பகுதியில் தணிந்து போன கெரில்லாப் போராட்டம் படிப்படியாக புதிய வலிமையுடன் தீவிரமாகியது. ஆரச படைகள், காவல்துறை, அரச பாதுகாப்பு அமைப்பு ("காட்") போன்றன அவர்களுடன் தீவிர சமர் புரிந்தன. சோவியத் தரப் நகரங்களையும் விமானத்தளங்களையும் மிக முக்கிய ,யந்திரத் தொழிற்சாலைகளையும் வீதிகளையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது.

1980 ஆம் ஆண்டு பெப்ரவரியில் சோவியத் ரசியாவின் மட்டுப்படுத்தப்பட்ட படைப்பிரிவின் எண்ணிக்கை எண்பத்தைந்தாயிரம் பேரை எட்டியது. ஆனால் 1984 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் 135000 பேராகும். 1985 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஆப்கானிஸ்தானில் இருந்த சோவியத் படைகளின் மொத்த எண்ணிக்கை 150000 பேரை எட்டியிருந்தது. இவர்களில் 75 வீதமானவர்கள் சமர்ப் பிரிவைச் சேர்ந்த வர்கள். ஆக 25 வீதமானவர்கள் பின்புல ஆதரவளிப்பவர்களும் ஆப்கானிஸ்தானிய இராணுவத்திற்கான இராணுவ அறிவுறுத் தலாளர்களாகவும் இருந்தார்கள். இது தவிர, துர்க்மெனிஸ்தான் இராணுவ வட்டத்தில் சேமப்படைகளாகக் கிட்டத்தட்ட 50000 இராணுவத்தினர் இருந்தார்கள். கொல்லப்பட்ட, காயப்பட்ட, கைதான, படையைவிட்டோடிய ஆட்கள் போன்றோரின் இழப்புக்களை ஈடுசெய்வதற்காக இவர்கள் பயன்படுத்தப்பட்டனர். அத்துடன், சேமப்படைக்கு அனுப்பப்படும் வீரர்களின் இடத்தையும் அவர்கள் நிரப்பினார்கள். 150000 பேருக்கு மேலதிகமாகப் படையை அதிகரிப்புச்செய்வது விநியோகக் கடினம் காரணமாகச் சாத்தியமற்றதாகியது. ஏனெனில், ஆப்கானிஸ்தானின் வீதியமைப்பு நல்ல முறையில் வளர்ச்சியடைந்திருக்கவில்லை. இதுதவிர, நீண்டுசெல்கின்ற போக்குவரத்துப் பாதைகள் தொடர்ச்சியாகக் கெரில்லாக்களின் தாக்குதலுக்கும் உள்ளானது. ஒன்பது ஆண்டு காலப்பகுதியில் (சனவரி 1980 ஆம் ஆண்டு - சனவரி 1989 ஆம் ஆண்டு வரை) வீதிகளில் கிட்டத்தட்ட 12000 பாரவூர்திகளையும் கொள்கலன்களையும் ஆயிரத்திற்கு மேற்பட்ட கவச வாகனங்களையும் காலாட்படையின் யுத்த வாகனங்களையும் அவர்கள் அழித்துள்ளனர் என்பதே சொல்லப் போதுமானதாகும்.

ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் படைப்பிரிவு எட்டு கனரக வாகன டிவிசன்கள், 105 ஆவது (விற்றெப்ஸ்) வான்-குடை டிவிசன், 103 ஆவது (ப்ஸ்கோவ்) வான்குடை டிவிசனின் இரண்டு - மூன்று ரெஜிமெண்டுகள், ஸ்பெற்நாஸின் இரண்டு பிரிகேட்டுக்கள், எல்லைக்காவல் படையின் இரண்டு படைப்பிரிவுகள் போன்றவற்றைக் கொண்டிருந்தது. ராங்கி, ஏவுகணை ரெஜிமெண்டுகளின் வெளியேற்றத்தின் விளைவால், சகல கனரக வாகன டிவிசன்களும் பூரணமாகப் பூர்த்தியடையாதவையாக இருந்தன. எட்டு கனரக வாகன டிவிசன்களில் ஏழு ஆப்கானிய வட்டவடிவ வீதியில் நிலைப்படுத்தப்பட்டிருந்தன. முறையே குஸ்கா - கெராட் - கந்தகார் - காஸ்னி -□ காபூல் - மசாரி-சரீவ் - தெர்மேஸ் எனும் வட்டத்திலாகும். புக்ராம், சின்தாந் ஆகிய விமானத்தளங்களிலும் ஏனையவற்றிலும் (மொத்தம் 12 விமான நிலையங்கள்) இரண்டு விமானப்படை டிவிசன்கள் (270 யுத்த விமானங்கள்), நான்கு யுத்த உலங்குவானூர்தி ரெஜிமெண்டுகள் (கிட்டத்தட்ட 250 எம்.ஐ.8 மற்றும் எம்.ஐ-24 உலங் குவானூர்திகள்) ஆகியன நிலை கொண்டிருந்தன. இவற்றிற்கு துர்க்கிஸ்தா னினதும் மத்திய ஆசியாவினதும் இராணுவ வட்டத்திலுள்ள விமானங்களிலிருந்து மேலும் இரண்டு விமானப்படை டிவிசன்கள் ஆதரவளித்தன. யுத்த உலங்குவானூர்திகள் தவிர, ஆப்கானிஸ்தானில் சோவியத் படைகள் கிட்டத்தட்ட 350 போக்குவரத்து உலங்குவானூர்திகளையும் வைத்திருந்தன.

ஆரம்பத்தில் 90000 பேரைக்கொண்ட ஆப்கானிஸ்தானிய இராணுவம் பாரிய இழப்பினதும் கூடுதலானோர் படையைவிட்டு ஓடியதனதுதம் விளைவாக (வருடத்திற்கு 20000 வரையானோர்) ஐந்து வருடத்தில் அரைவாசிக்குக் கூடுதலாகக் குறைவடைந்தது. 1986 ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானிய இராணுவம் காலாட்படையில் 40000 பேரையும் விமானப்படையில் 7000 பேரையும் (150 யுத்த விமானங்கள், 30 யுத்த உலங்கு வானூர்திகள்) கொண்டிருந்தது. உண்மையில் இவற்றுடன், 30000 காவற்றுறையினர், 35000 காட் பணியாளர்கள் (அரச பாதுகாப்பு அமைப்பு), சில ஆயிரக்கணக்கில் எல்லைக்காவற்படை (5 பிரிகேட்டுக்கள்), கமாண்டோக்கள் (4 பிரிகேட்டுக்கள்) போன்றனவற்றையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

ஆப்கானிஸ்தானிய ,ராணுவம் 11 காலாட்படை, 3 ராங்கி, 2 கனரகவாகன டிவிசன்களையும் ஒன்றிணைந்த 3 இராணுவப் படைப்பகுதிகளையும் (காபூல், கந்தகார், கர்தேஸ் படைப்பகுதிகள்) உள்ளடக்கியிருந்தது.

பேரியளவிலான ஆளணிகள் பற்றாக்குறையின் காரணமாக, அரச படைகளின் டிவிசன்கள் உண்மையில் பிரிகேட்டுக்களாகவே விளங்கின. இவை ஒவ்வொன்றிலும் கிட்டத்தட்ட 2500 பேரே இருந்தார்கள். இராணுவத்தை அதிகரிக்க அரசாங்கம் பின்வரும் முயற்சிகளை மேற்கொண்டது. பணியாற்றும் காலத்தை நீடித்தல், இராணுவத்தில் இணையும் ஆகக்குறைந்த வயதெல்லை வரம்பை 16 வயதாகக் குறைத்தமை, பலாத்காரமான படைதிரட்டல் போன்றனவே அவையாகும். ஆனாலும், இவை யாவும் குறித்த வெற்றியைத் தரவில்லை. ஆப்கானிய அதிகாரிகளின் நிபுணத்துவம் சார் தயார்ப்படுத்தல் வரம்பெல்லை அடிமட்டத்தில் இருந்தது. அத்துடன், அவர்கள் கெரில்லாக்களுக்கு எதிராகச் சுயமான நடவடிக்கைககளை (சோவியத் அறிவுறுத்தலாளர்களதும் சோவியத் படைகளதும் உதவியின்றி) மேற்கொள்ளத் தகுதியற்றவர்களாகவும் இருந்தார்கள். இளைய அதி காரிகளது ஆளணியிலும் நவீன ஆயுதங்களைத் திறம்படக் கையாளக்கூடிய நிபுணர்களிலும் பெரிய ஆட்பற்றாக்குறையை இராணுவம் சந்தித்தது. ஆப்கானிய அதிகாரிகளில் ரெும்பாலானோர் கால்க் பிளவுக்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். இதன் காரணத்தால், பர்சாம் பிளவுக்கட்சி பலமடைவது அவர்களிடத்தில் அதிருப்தியை உண்டாக்கியது. இதனால், சிலர் கெரில்லாக்களின் பக்கத்திற்கும் தாவினார்கள். விமானிகளின் நம்பகத்தன்மையின்மேல் சந்தேகம் ஏற்பட்டதன் விளைவாக, ஆப்கானிய விமானங்களிலும் உலங்கு வானூர்திகளிலும் கூடுதலாக சோவியத் அதிகாரிகளே விமானிகளாகப் பறப்பை மேற்கொண்டார்கள்.

தொடர்வான்...

நெற்றிபொறியன்

# கொரோனா வைரஸின் தாக்கத்தினால் வீழ்ச்சி கண்டுள்ள இலங்கை பொருளாதாரம்




ஒரு காலத்தில் பொருளாதாரத்தின் உச்சத்தில் இருந்த நாடு. துனக்குத் தேவையான சகல வளங்களையும் வைத்துக்கொண்டு இன்று வெளிநாடுகளிடம் கடனுதவிகளுக்காக கையேந்தி நிற்கும் நாடாக மாறியிருக்கிறது இலங்கை. தனக்கென உலக சந்தையில் தனியானதொரு இடத்தினைக் கொண்டிருந்த நாட்டுக்கு திடீரென நடந்தது என்ன? இலங்கை யினது இன்றைய பொருளாதாரம் தலைகீழாக வீழ்ந்திருப்பதற்கான காரணம் என்ன? என்கிற பலவாறான கேள்விகள் எழாமலில்லை.

இலங்கையின் பொருளாதாரம் பெருந் தோட்டப் பயிர்செய்கைகளான தேயிலை, இறப்பர், கொக்கோ, கிராம்பு போன்றவையே பிரதான வருவாயாக விளங்கியது. அண்மைக் காலங்களில் பெருந்தோட்டங்கள் சிங்கள மக்களுக்கு குடியேற்ற கிராமங்களாக பிரித்துக்கொடுக்கப்பட்டதனால், அவ்வருமானம் வீழ்ச்சியடைந்ததுடன், தற்போது இலங்கையின் பிரதான வருமானமாக வெளிநாட்டு பணியா ளர்கள் ஊடாகவே கிட்டப்படுகின்றது.

குறிப்பாக மத்திய கிழக்காசிய நாடுகளில் வீட்டுப் பணிப்பெண்களாக பணிபுரிவோரின் ஊடாகவே பெறப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. அதனைத்தவிர சுற்றுலா, தேயிலை, புடவை போன்றவற்றில் இருந்து கணிசமான வருவாய் கிட்டுகின்றன. தற்போது இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் தமது குடும்பத்தாருக்கு உதவி வரும் நிதி போன்றனவும் இலங்கைக்கான ஒரு வருவாய் மார்க்கமாகவே உள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது.

2019ம்ஆண்டுகாலப்பகுதியில்இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2,312,078 மில்லியனாக பதிவாகியுள்ளது. இந்த ஆண்டில் 2வது காலாண்டில் நடப்பு விலையில் இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி 3,012,013 மில்லியனாக குறைந்துள்ளதுடன், 2019ம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 3,589,246 மில்லியனாக பதிவாகியுள்ளது. நிலையான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாரிய வீழ்ச்சியை நோக்கி இலங்கை நகர்ந்து ள்ளதை இலங்கை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் உறுதிப்படுத் தியுள்ளது.

2020ம் ஆண்டு இரண்டாம் காலாண்டில் இலங்கை மொத்த உள்நாட்டு உற்பத்தி 16.3 சதவீத வீழ்ச்சியை நோக்கி சரிவடைந்துள்ளதாக திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2019ம் ஆண்டின் 2ஆவது காலாண்டில் பதிவான வளர்ச்சி வீதத்தின் 1.1 சதவீதத்துடன் ஒப்பிடும் போது, இலங்கை வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு மிகப் பெரிய வீழ்ச்சியை நாடு சந்தித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொவிட்-19 தாக்கத்திற்கு மத்தியில் உலகி லுள்ள பல நாடுகள் இவ்வாறான பொருளாதார சரிவை நோக்கி நகர்ந்துள்ளதாக தெரிவிக்க ப்படுகின்றது. கொவிட் தாக்கம் நாடு முழுமை யாக முடக்கப்பட்டிருந்தது. அதன் பின்னரான காலத்தில் நாட்டில் அமல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்கு படிப்படியாக தளர்த்தப்பட்டாலும், முக்கிய தொழில்துறைகள் மற்றும் வணிக இடங்கள் காணப்படும் கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் ஊரடங்கு தொடர்ந்தும் அமல்படுத்தப்பட்டிருந்தது.

சமூகத்திற்கு இடையில் கோவிட் தொற்று பரவாதிருக்கும் நோக்குடனேயே இந்த நடவடிக் கைகளை அரசாங்கம் முன்னெடுத்திருந்தது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை காரணமாக கொவிட் தொற்றை கட்டுப்படுத்த முடிந்த போ திலும், நாட்டின் பொருளாதாரம் மோசமான அளவில் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது. இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள எழ வேண்டுமாயின், தொலைத்தொடர்பு, தகவல் தொழில்நுட்பம், சில்லறை வர்த்தகம், உள்ளூர் விவசாயம் ஆகிய துறைகளினாலேயே வளர்ச்சி நோக்கிப் பயணிக்க முடியும் என்றும் கூறப்படுகின்றது. எனினும், குறித்த துறைகளின் வளர்ச்சியானது, நாட்டின் பொருளாதாரத்தை நேர் நிலை க்கு கொண்டு வருவதற்கான துறைகளாக கணிப் பிடமுடியாது எனவும் அதைவிடுத்து, சுற்றுலாத் துறை, ஆடை ஏற்றுமதித்துறை மற்றும் தேயிலை ஏற்றுமதித்துறை ஆகிய மூன்று துறைகளையும் வளர்ச்சி அடைய செய்வதன் ஊடாகவே இந்த பொருளாதார வளர்ச்சியை நோக்கி நகர முடியும் என குறிப்பி டப்படும் அதே வேளை கொவிட் தொற்று உலகி ல் முழு மையாக இல்லாதொழிக்கப்படும் பட்ச த்திலேயே, இலங்கை போன்ற நாடுகளுக்கு சாதகமான நிலைமை ஏற்படும். இலங்கை இந்த ஆண்டில் பொருளாதார ரீதியில் வீழ்ச்சியை நோக்கியே நகர்ந்துள்ளதாகவும், இலங்கையில் 1977ம் ஆண்டு திறந்து விடப்பட்ட பொருளா தாரம், தற்போது மூடப்பட்டுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.கணேஷமூர்த்தி குறிப்பிடுகின்றார்.

இலங்கையின் முக்கிய ஏற்றுமதி துறையான ஆடைத் தொழில்துறைக்கு சவால் விடுக்கும் வகையில் ஏனைய நாடுகளும், குறித்த தொழில்துறையில் வளர்ச்சியை கண்டுள்ளதாக அவர் தெரிவிக்கின்றார். அதனால், மூடிய பொருளாதார கொள்கையை அரசாங்கம் கடைபிடிக்குமாக இருந்தால், வெளிநாடுகள் மாற்று திட்டங்களை நோக்கி நகரும் என அவர் குறிப்பிடுகின்றார்.

இலங்கையின் பொருளாதாரத்தை வளர்ச்சி அடைய செய்ய வேண்டும் என்றால், மூடிய பொ ருளாதார கொள்கையை கைவிட வேண்டியது அத்தியாவசியமானது என கொழும்பு பல்கலை க்கழகத்தின் பொருளியல்துறை சிரேஷ்ட விரிவு ரையாளர் எம்.கணேஷமூர்த்தி தெரிவிக்கி ன்றார்.

பழங்காலம் முதலே ஒன்பது இரத்தினங்கள், யானைத் தந்தம், முத்துகள் போன்ற பொருட்களுக்குப் புகழ்பெற்ற இலங்கை, குடியேற்ற காலத்தில் கறுவா, தேயிலை, இறப்பர், தென்னை போன்ற வர்த்தகப் பயிர்களுக்கு பெயர் பெற்று விளங்கியது. இலங்கைக்கு 1948யில் விடுதலை பெற்ற பின்னர், முதலாளித்துவ பொருளாதாரத்தைப் சிறிது காலமே பின்பற்றிய போதிலும் அது ஆசியாவிலே மிக முன்னேற்றகரமான பற்பல சமூகநல நடவடிக்கைகளையும் மேற் கொண்டது. ஆனால் 1956 ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் முழுக்க முழுக்க சமவுடமை பொருளாதாரத்தையே கைக்கொள்ளத் தொடங்கியது. 1977ம் ஆண்டுக்குப் பின்னர், தனியார்மயப்படுத்தலில் ஈடுபட்டுள்ளதுடன், சந்தைப் பொருளாதாரக் கொள்கையையும், ஏற்றுமதி சார்ந்த வர்த்தகத்தையும் நோக்கி நகர்ந்துள்ளது. தற்போது மிகை இயங்குநிலை யிலுள்ள துறைகளாவன, உணவுப் பொருள் உற்பத்தி, ஆடை உற்பத்தி, உணவும் குடிவகைகளும், தொலைத் தொடர்பு, காப்புறுதி, வங்கித் துறைகளாகும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP), 1990களில் சராசரியாக 5.5% ஆண்டு வளர்ச்சியைப் பெற்றது. வறட்சியும், சீர் கெட்டுவந்த பாதுகாப்பு நிலையும், 1996இல் வளர்ச்சியை 3.8% க்குத் தாழ்த்தும் வரை இது நீடித்தது. 1997-2000 காலப்பகுதியில், சராசரி 5.3% வளர்ச்சியோடு கூடிய பொருளாதார மீட்சி காணப்பட்டதெனினும், மின்சாரப் பற்றாக் குறை, வரவுசெலவுப் பிரச்சினைகள், உலகப் பொருளாதார மந்த நிலை, மற்றும் தொடர்ந்து வந்த உள்நாட்டுக் குழப்பங்கள் என்பவற்றால், 2001ல் வரலாற்றில் முதல் முறையாக இலங்கை ஒரு பொருளாதார ஒடுக்கத்தைக் காண நேர்ந்தது. எனினும் 2001 ல், கையெழுத்து இடப்பட்ட, இலங்கை அரசாங்கம், விடுதலைப் புலிகள் இடையேயான போர் நிறுத்த ஒப்பந்தம் காரணமாகப் பொருளாதாரம் தேறி வருவதற்கான அறிகுறிகள் காணப்படுகி ன்றன. கொழும்பு பங்குச் சந்தை 2003ல் ஆசியாவிலேயே ஆகக் கூடிய வளர்ச்சியைப் பெற்றிருப்பதாக அறிவித்துள்ளது. தற்போது, தென்னாசியாவிலுள்ள முக்கிய நாடுகளிடையே அதிக தனி நபர் வருமானத்தைக் கொண்ட நாடு இலங்கையாகும்.

தற்போது வெளிநாட்டு பணியாளர் ஊடான வருவாயே இலங்கை பொருளாதாரத்தின் பிரதான அங்கமாகியுள்ளது. கல்வி கற்காதோர் முதல், உயர் தரம் கற்றோர் வரை ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும் எளிதாக தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு துறையாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைந்துள்ளப்படியால், பெரும்பாலானோரின் தெரிவு வெளிநாட்டு வேலை வாய்ப்பாகவே மாறி வருகின்றது. உள்நாட்டில் தொழில் புரிவோரும் அத்தொழில்கள் ஊடாக போதிய வருவாயை ஈட்ட முடியாத நிலையும், இலங்கையில் தொடர்ந்து ஏற்பட்டுவரும் விலைவாசி அதிகரிப்பிற்கு முகம் கொடுக்க முடியாத நிலையும் வெளி நாட்டு வேலை வாய்ப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் சமுகமாக இலங்கை சமூகம் மாற்றமாகி வருகிறது. இந்த வெளிநாட்டு வேலை வாய்ப்பில் பெரும்பாலானோர் வீட்டுப் பணியாளர்களாகவே தொழில் புரிகின்றனர். மத்தியக் கிழக்காசிய நாடுகளில் இலட்சக் கணக்காணோர் வீட்டு பணியாளர்களாகவே தொழில் புரிகின்றனர். மத்திய கிழக்காசிய நாடுகளைத் தவிர உலகின் பலவேறு நாடுக ளிலும் வீட்டுப் பணியாளர்களாக இலங்கையர் தொழில் புரிகின்றனர். இவ்வாறான வெளி நாட்டு வேலை வாய்ப்பின் ஊடாகவே தற்போ தைய இலங்கையின் பிரதான பொருளாதாரம் ஈட்டப்படுகின்றது.

2009ம் ஆண்டுக்கு முன்பு இலங்கையின் உள்நாட்டுப் போர் நடைபெற்று வந்த வட கிழக்கு பகுதிகளைத் தவிர்ந்த ஏனையப் பகுதிகளில் வாழும் மக்கள் மட்டுமே வெளி நாட்டு பணியாளர்களாக அதிகம் இருந்தனர். தற்போது வட கிழக்கு மக்களும் இலங்கையின் வருவாயை ஈட்ட போதுமான தொழில் வாய்ப்பு இல்லாமையாலும், இலங்கையில் செலவீனங் களுக்கு முகம் கொடுக்க முடியாமையினாலும் வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெறுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்பதும் கவனி க்கத்தக்கது. அரசாங்கமும் வெளிநாடுகளுக்கு சென்றுபணிபுரிவதன்ஊடாககிட்டும்வருவாயை கவனத்தில் கொண்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்பையே ஊக்குவித்து பொருளாதாரத்தை ஈட்டி வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

'தனியார் துறை பொருளாதார வளர்ச்சியின் இயந்திரமாக பார்க்கப்படுகிறது. இந்த நற்பெயர் ஒரு யதார்த்தமாக மாற, எப்போதும் பாரம்பரிய மற்றும் குறைந்த அபாய உத்திகளைத் தேர்ந் தெடுப்பதற்குப் பதிலாக, அதிக நன்மைகளைப் பெறுவதற்கான ஆற்றலுடன் தைரியமாக முதலீடு செய்யுங்கள்' என்று ஜனாதிபதி கோட்டபாய அவர்கள் கொழும்பில் ஆரம்பமான இலங்கை பொருளாதார மாநாடு 2020 (Sri Lanka Economic Summit 2020) இல் தெரிவித்தார். கொவிட் 19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தின் மறுமலர்ச்சி மற்றும் தொடர்ச்சியான வளர்ச்சி க்காக தனது தலைமையின் கீழ் அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை விளக்கிய ஜனாதிபதி அவர்கள், மக்களின் அபிலாஷைகளை நன்கு நிறைவேற்றும் வகையில் தனியார் துறை யின் முழு திறனையும் பயன்படுத்த உதவும் வகையில் தனது பொறுப்புகளை நிறைவேற்றி வருவதாக தெரிவித்தார். இந்த இலக்கை அடைய உதவும் வகையில் 2021 வரவு செலவு திட்டத்தில் பல அணுகுமுறைகள் அறிமுக ப்படுத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார். 'இலங்கை பொருளாதார மாநாடு 2020' இலங்கை வர்த்தக சம்மேளத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. 20 வது தடவையாக நடை பெறும் இம்மாநாட்டின் கருப்பொருள் 'மக்கள் மைய பொருளாதார மறுமலர்ச்சிக்கு வழி யமைப்போம்' என்பதாகும். இந்திய குடியரசின் நிதி மற்றும் வர்த்தக விவகாரத்துறை அமைச் சர் திருமதி நிர்மலா சீதாராமன் இங்கு சிறப் புரையாற்றினார். இரண்டு நாள் மாநாட்டில் முன்னணி கொள்கை வகுப்பாளர்கள், வர்த்த கர்கள் மற்றும் சர்வதேச பொருளாதாரத்துறை பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி, இலங்கையில் இடம்பெற்ற அசம்பாவித நிகழ்வுகளுக்குப் பின்னர், இலங்கையின் பொருளாதாரத்தில் மாபெரும் வீழ்ச்சி நிலையொன்று ஏற்பட்டதை, யாரும் மறுக்க முடியாது. மூன்றுக்கு மேற் பட்ட மாதங்களை நாம் கடந்துள்ள போதிலும் குறித்த நிகழ்வால் ஏற்பட்ட பொருளாதார அதிர்வுநிலையில் பெரிதாக மாற்றம் ஏற்படவி ல்லை. இலங்கையின் பொருளாதாரச் செயற்பாடுகள், இந்நிகழ்வுகளுக்கு முன்னதாக வே, மிகப்பெரும் நெருக்கடியிலிருந்ததுடன், அதைத் தீர்ப்பதற்கு, சுற்றுலாத்துறை, வெளி நாட்டு நேரடி முதலீடுகளை அடிப்படையாகக் கொண்டே, நாட்டின் அபிவிருத்தி இலக்குகள் திட்டமிடப்பட்டிருந்தன. தற்போது, அவற்றின் மூலமான எவ்வித நலன்களையும், மிக விரைவாகப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை யுள்ளதால், இலங்கையின் பொருளாதார நிலைப்பாடு, மிகப்பெரும் கேள்விக்குள்ளாகி யுள்ளது. இலங்கை பொருளாதாரத்தை கரு த்தில் கொண்டு புலம் பெயர்ந்து வாழும் தமி ழர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் பொருளா தாரத்தில் செழிப்பான நிலையில் இருப்பதனால், மீண்டும் இலங்கைத் திரும்பி தமது வணிக நடவடிக்கைகளைத் தொடரவும் அழைப்பு விடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

எனவே, இலங்கை அரசாங்கமும் அதுசார் அதிகாரிகளும், நாட்டின் தற்போதைய இக் கட்டான நிலையைப் புரிந்துகொண்டு, நாட்டின் வளர்ச்சியை முன்னேற்ற உதவ க்கூடிய வெளிநாட்டு நேரடி முதலீடுகள், தொழில்சார் விருத்தி கட்டமைப்புக்களில் முன்னேற்றங்களை ஏற்படுத்தும் வகையிலா னத் திட்டங்களை முன்னெடுப்பதுடன், எந்த வகையான அரசியல் செயற்பாடுகளும் நாட்டின் அபிவிருத்தியையும் அதுசார் தொழிற்றுறைக ளையும் பாதிக்காத வகையில் முன்னெடுத்துச் செல்வதாக இருக்கவேண்டும்.

**சுழியோடி**

# கொரோனா காலப்பகுதியில் கர்ப்பிணிகள் என்ன செய்ய வேண்டும்?



இலங்கையில் நகரம், கிராமம் என வித்தியாசம் இல்லாமல் பரவிக் கொண்டிருக்கிறது கொரோனா வைரஸ். இந்நிலையில், கர்ப்பிணிகள் உடல் ரீதியா கவும் மன ரீதியாகவும் பல சிக்கல்களைச் சந்திக்கின்றனர். அதற்கு என்ன தீர்வு? பொதுவாக கர்ப்பிணிகளுக்கு கொரோனா தொற்றும் வாய்ப்பு மிகவும் குறைவே. அவர்கள் பெரும்பாலும் வீட்டில் இருப்பதால் இது சாத்தியமாகிறது. ஆனாலும், வீட்டிலுள்ள மற்றவர்கள் வெளியில் சென்று வருவதால், கர்ப்பிணிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

கர்ப்ப காலத்தில் நோய் எதிர்ப்பு சக்தி இயற்கையிலேயே குறைவாக இருக்கும். இப்போது ஊடகங்கள் கிளப்பும் கொரோனாபீதியால் பதற்றமும் மன அழுத்தமும் புதிதாக ஏற்படுகின்றன. அவையும் அவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைத்து விடுகின்றன. இப்படியொரு சூழலில் மற்றவர்களை போலவே கர்ப்பிணிகளையும் வைரஸ் பாதிக்கிறது. முக்கியமாக கர்ப்பத்தின் கடைசி 3மாதங்களில் கொரோனா ஆபத்து அதிகரிப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்து, உடற்பருமன், நாட்பட்ட உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு, இதய நோய்,சுவாச நோய், ரத்தசோகை, குறை தைராய்டு போன்றவை கட்டுப்பாட்டில் இல்லாமல் இருந்தால், கொரோனா தொற்று ஆபத்தில் முடிகிறது. கர்ப்பிணிகளுக்கு ரத்தம் உறையும் தன்மை பொதுவாகவே அதிகரிக்கும் என்பதாலும் கொரோனா தொற்று உள்ளவர்களுக்கு இதே பிரச்சினை ஏற்படுவதாலும் கர்ப்பிணிகளுக்கு முன்னெச்சரிக்கை அவசியமாகிறது.

இதுவரை வந்துள்ள புள்ளிவிவரப்படி, மேற்சொன்ன நோய்கள் இல்லாத கர்ப்பிணிகளுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டாலும் அதிக ஆபத்து உண்டாவதில்லை. கர்ப்பிணிக்கு நிமோனியா எனும் நுரையீரல் பிரச்சினை வந்தாலும் மிதமான நிலையில் இருக்கிறது. சிகிச்சையில் சரியாகி விடுகிறது. சிசுவுக்கும் பாதிப்பில்லை. குறிப்பாக, கரு கலைவதில்லை. குறைப் பிரசவம் ஆவதில்லை. வேறு ஆரோக்கிய பிரச்சினைகள் இல்லையென்றால் சுகப் பிரசவமும் ஆகிறது. இயற்கை பிரசவம் வழியாக குழந்தைக்கு கொரோனா தொற்றுவது இல்லை.

**என்ன செய்ய வேண்டும்?**

கர்ப்பிணிகள் வீட்டை விட்டு வெளியில் செல்வதைத் தவிர்ப்பது நல்லது. புதிதாகதிருமணம் ஆனவர்கள் மாத விலக்கு தள்ளிப் போனதும் உடனே மருத்துவமனைக்கு வருகின்றனர். அப்படி வரத் தேவையில்லை. வீட்டில் இருந்து கொண்டே மகப்பேறு மருத்துவரிடம் ஆலோசனை பெறலாம். வீட்டில் தனி மனித இடைவெளி, முகக் கவசம் அணிவது, கைகளைச் சோப்பு போட்டு அடிக்கடி கழுவிக் கொள்வது என எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.



மருத்துவர் யோசனைப்படி ஆரோக்கிய உணவுகளைத் திட்டமிட்டு உண்ணுங்கள். ஃபோலிக் அமில மாத்திரைகள், ஜிங்க், விட்டமின்-சி, விட்டமின்-டிமாத்திரைகளைச் சாப்பிட வேண்டும். மாத்திரைகளை தவறாமல் சாப்பிட்டு நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், குறை தைராய்டு, ரத்தசோகை போன்றவற்றை கட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும்.

**பயிற்சிகள் அவசியம்**

மாதக் கணக்கில் வீட்டிலேயே முடங்கி இருப்பதால், உடல் எடை அதீதமாகக் கூடிவிடக் கூடாது. நடைப்பயிற்சி முக்கியம். யோகா, சின்ன சின்ன உடற்பயிற்சிகள் செய்யலாம். பிராணாயாமம், தியானம் மிக நல்ல பயிற்சிகள்.

வழக்கமான வயிற்று அல்ட்ரா சவுண்ட் பரிசோதனைகளையும் தடுப்பூசி போடுவதையும் தள்ளிப் போட்டுக் கொள்ளலாமா? என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். அதேநேரம், குழந்தையின் வளர்ச்சியில் பிறழ்வு இருக்கிறதா என்பதை அறிய முதல் 3 மாத கர்ப்பத்தில் எடுக்கப்படும் 'நியூக்கல் ஸ்கேன்', இடைப்பட்ட கர்ப்ப காலத்தில் எடுக்கப்படும் 'அனாமலி ஸ்கேன்' போன்றவற்றைத் தவிர்க்க முடியாது.

**தொற்று இருந்தால்?**

கொரோனா தொற்று இருந்தவருடன் தொடர்பு இருந்தால், RT-PCR கொரோனா பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். அதில் தொற்று இருப்பதாக முடிவு வந்து, அறிகுறிகள் இல்லை என்றால், வீட்டிலேயே 2 வாரங்களுக்குத் தனிமைப்படுத்திக் கொள்ளலாம். அப்போது உடலின் வெப்பநிலையைப் பார்த்துக் கொள்வதும், பல்ஸ் ஆக்ஸிமீட்டர் கொண்டு ரத்த ஆக்ஸிஜன் அளவை அளந்து கொள்வதும்கரோனாபாதிப்பு அடங்குகிறதா, அதிகமாகிறதா என்பதைத் தெரிந்து கொள்ள உதவும்.

கரோனா அறிகுறிகள் இருந்தால், மருத்துவரிடம் ஆலோசிக்க வேண்டும். RT-PCR கொரோனா பரிசோதனையில் தொற்று இல்லை என்று முடிவு வந்து, அறிகுறிகள் காணப்படுமானால் அவர் கொரோனா தொற்று உள்ளவராகவே கருதப்படுவார். மறுபரிசோதனையும் தேவைப்படும்.

கர்ப்பிணிகள் 8-வது கர்ப்ப மாதத்துக்குப் பிறகு குழந்தையின் அசைவுகளைக் குறித்துக் கொள்ள வேண்டும். அசைவில் மாறுதல் தெரிந்தால் உடனே மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும். கர்ப்பிணிகள் பிரசவத் திகதிக்கு ஒரு வாரத்துக்கு முன்பு RT-PCR கொரோனா பரிசோதனை செய்து கொள்ள வேண்டியது கட்டாயம்.

**தாய்ப்பால் ஊட்டுதல்**

தாய்ப்பால் மூலம் கொரோனா பரவாது என்பதால் குழந்தை பிறந்தவுடன் வழக்கம் போல் தாய்ப்பால் கொடுக்க ஆரம்பித்து விடலாம். தாயும் குழந்தையும் தனித்தனி அறைகளில் இருந்தால், 'பிரஸ்ட் பம்ப்' மூலம் தாய்ப்பாலை எடுத்து குழந்தைக்குக் கொடுக்கலாம். அப்போது 'பிரஸ்ட் பம்ப்'பையும் சுத்திகரித்துக் கொள்ள வேண்டும். அது மார்பகத்தில் பொருந்தும் இடங்கள் முழுவதையும் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்தப் பாதுகாப்பு முறைகள் எல்லாமே தாய்க்குத் தொற்று இல்லை என்று பரிசோதனை முடிவு வந்த பிறகும் 2 வாரம் வரை பின்பற்ற வேண்டியது முக்கியம்.

**கொரோனா வைரஸின் திடீர் எழுச்சியின் போது கர்ப்பிணிப் பெண்களுக்கான அறிவுறைகள்**

மருத்துவ சேவைகளுக்காக நீங்கள் பதிவு செய்யவில்லை எனில், உங்கள் குடும்ப சுகாதார சேவை அதிகாரி அல்லது உங்கள் உடல்நிலை குறித்த மருத்துவ அதிகாரிக்கு தொலைபேசி மூலம் தெரிவிக்கவும்

நீங்கள் 8 மாதங்கள் (32 வாரங்கள்) அதற்கு மேற்பட்டதான கர்ப்பிணியாக இருந்தால் உங்கள் குடும்ப சுகாதார சேவை அதிகாரியை தொடர்பு கொண்டு மருத்துவரை சந்திக்கவும்

நீங்கள்8 மாதங்களுக்கு(32வாரங்களுக்கு) குறைவான கர்ப்பிணியாக இருந்தால் உங்களுக்கு கீழேக்குறிப்பிட்டுள்ள அறிகுறிகள் இருப்பின் உங்கள் குடும்ப சுகாதார சேவை அதிகாரியை தொலைப் பேசி மூலம் தொடர்புக் கொண்டு உங்கள் தற்போதைய சுகாதார நிலைமை குறித்து அவர்களுக்கு அறிவித்து மருத்துவரை சந்திக்கவும்.

- **நீரிழிவு நோய்**
- **உயர் இரத்த அழுத்தம்**
- **இதய நோய்கள்**
- **சுவாச பிரச்சினைகள்**
- **வேறு ஏதேனும் அறிகுறிகள் அல்லது சிரமங்கள்**

முடிந்தவரை வீட்டிலேயே இருங்கள். தேவையற்ற பயணத்தைத் தவிர்க்கவும். உ.ம். நிகழ்வுகள், பயணங்கள், பொருள் கொள்வனவு போன்றவை.

**தொகுப்பு இணையம்**

# தலிபான் படைகளுடன் தமிழ்ஈழவிடுதலைப்புலிகள் அமெரிக்கப்படைகள் வெளியேற்றமும் தலிபான்களின் வெற்றியும்



ஆப்கானிஸ்தானின் பெரும்பாலான நகரங்களை எதிர்ப்பின்றி கைப்பற்றிய தலிபான்கள் இன்று காபூலையும் தன்வசம் கொண்டுவந்தனர். இதனால் தற்போது ஒட்டுமொத்த ஆப்கானிஸ்தான் அதிகாரத்தையும் தலிபான் அமைப்பு கைப்பற்றியுள்ளது.

### எதிர்ப்பே இல்லாது தலிபான் வசமான ஆப்கான்

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகளை திரும்பப்பெறுவதாக அந்நாட்டு அதிபர் ஜோ பைடன் அறிவித்த பின்னர், தொடர்ச்சியாக பல்வேறு நகரங்களையும், மாகாணங்களையும் தலிபான்கள் எந்தவித எதிர்ப்புமின்றி கைப்பற்ற தொடங்கினார்கள். ஆப்கானில் தலிபான்களுக்கு சவாலான நகரமாக இருந்த மசர் இ ஷரீஃபையும் அவர்கள் கைப்பற்றினார்கள். இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலையும் எந்த எதிர்ப்புமின்றி இன்று தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர் தலிபான்கள்.

தலைநகர் காபூலை தலிபான்கள் கைப் பற்றியதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தான் அதிபர் அஷ்ரப் கனி ராஜினாமா செய்து ள்ளதாக தகவல் வெளியாகியிருக்கிறது. ஆப்கான் அரசு, தலிபான்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி அமைதியான முறையில் ஆட்சி மாற்றத்திற்கான பணிகளை செய்து வருவதாகவும் தெரிகிறது.

ஆப்கானிஸ்தானில் சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், மக்களை காக்கவும் அரசுப்படைகளுக்கு தற்போதைய அதிபர் அஷ்ரப் கனி அறிவித்திருக்கிறார். அடுத்ததாக தலிபான்கள் தரப்பில் யார் ஆட்சி தலைமை பெறுப்பேற்பார் என்பது தொடர்பான ஆலோசனைகளை தலிபான் அமைப்பு நடத்தி வருகிறது.

இந்த சூழலில் ஆப்கானிஸ்தான் இடைக் கால அரசின் தலைவராக முன்னாள் உள் துறை அமைச்சர் அலி அகமது ஜலாலி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஆப்கானை தலிபான்கள் கைப்பற்றிய நிலையில், காபூலில் இருந்து அமெரிக்க தூதரக அதிகாரிகள் ஹெலிகாப்டர் மூலமாக நாட்டிலிருந்து வெளியேறியதாக தெரிய வந்துள்ளது.

இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் பலவும் தங்கள் அதிகாரிகள் மற்றும் மக்களை ஆப்கானிலிருந்து பத்திரமாக வெளியேற்றும் நடவடிக்கைகளை செய்துவருகின்றன.

### அமெரிக்கப்படைகள் வெளியேற்றமும் தலிபான்களின் வெற்றியும்

ஆப்கானிஸ்தானை தலிபான் படைகள் கைப்பற்றியுள்ள சூழலில் . ஆப்கனிலிருந்து அமெரிக்கப் படைகளை பத்திரமாக வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை ஜோ பைடன் மேற்கொண்டுள்ளார்.

இதுகுறித்து தனது தேசிய பாதுகாப்பு குழுவுடன் கலந்தாலோசித்த ஜோ பைடன், ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கப் படையினர், அமெரிக்கா படையில் பணியாற்றிய ஆப்கன் மக்கள், தூதரக அதிகாரிகள் என 30 ஆயிரம் பேரை பாதுகாப்பாக நாட்டிலிருந்து வெளியேற்ற 5,000 அமெரிக்க வீரர்கள் அனுப்ப வுள்ளதாக தெரிவித்தார், ஏற்கனவே 3,000 பேரை அனுப்ப முடிவு செய்திருந்த நிலையில் தற்போது எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த விவகாரத்தில் தலிபான்களை எச்சரித்த பைடன், "அமெரிக்க பணியா ளர்களையோ அல்லது எங்கள் பணி களையோ ஆபத்தில் ஆழ்த்தும் எந்தவொரு நடவடிக்கையையும் தலிபான்கள் செய்தால், அமெரிக்கா அழுத்தமான இராணுவப் பதிலடியை கொடுக்கும்" என தெரிவித்தார். அமெரிக்க வீரர்கள், தூதரக ஊழியர்கள் மற்றும் அமெரிக்கப் படைகளுக்காக பணியாற்றிய ஆப்கானிஸ்தான் பொது மக்கள் 30ஆயிரம் பேரை ஓகஸ்ட் 31ஆம் திகதிக்குள் பாதுகாப்பாக வெளியேற்றப் படுவதை உறுதி செய்வதற்காக அமெரிக்க இராணுவ வீரர்களை காபூலுக்கு அனுப்பி யுள்ளதாக அமெரிக்கா தெரிவித்திருக்கிறது.

ஆப்கானிஸ்தானில் இருந்து துருப்புக்களை வெளியேற்றுவதற்கான பைடனின் முடிவு, கடும் விமர்சனங்களை எதிர்கொண்டு வருகிறது. ஆனால் வேறு வழியில்லை என்று கூறிய பைடன், முந்தைய அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் ஆப்கானிஸ்தான் கொள்கை மீது பல குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

இது தொடர்பாக பேசிய பைடன், " எனக்கு முன் இரு வாய்ப்புகள் இருந்தன. ஒன்று எங்கள் படைகள் மற்றும் நமது கூட்டாளிகளின் படைகளை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான ஒப்பந்தத்தை பின்பற்றுவது அல்லது நமது இருப்பை அதிகரித்து மற்றொரு நாட்டின் உள் நாட்டு மோதலில் மீண்டும் போராட அதிக அமெரிக்க துருப்புக்களை அனுப்புவது ஆகும். ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படைகளை போராடவைக்கும் நான்காவது ஜனாதிபதியாக நான் உள்ளேன். 5வது ஜனாதிபதிக்கும் இதை கடத்தமாட்டேன்" என தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறுவதாக அறிவித்த பின்னர், தலிபான்கள் வேகவேகமாக அனைத்து நகரங்களையும் கைப்பற்ற தொடங்கினார்கள் பெரும்பாலான நகரங்களில் ஆப்கனின் அரசுப்படைகள் எந்த எதிர்ப்பையும் காட்டாமல் தலிபான்களிடம் சரணடைந்தனர். அரசுப்படைகளின் ஆயுதங்களையும் பலர் தலிபான்களுக்கு வழங்கியதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது.

இது தொடர்பாக ஜோ பைடனை கடுமையான விமர்சித்துள்ள முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஆப்கானிஸ்தானை தலிபான்கள் தொடர்ந்து கைப்பற்றிவருவதால், பைடன் ஆப்கா னிஸ் தான் கொள்கையில் தோல்வி யடைந்துள்ளார். தாலிபான்களுக்கு இனி அமெரிக்கா, அல்லது அமெரிக்காவின் சக்திமீது பயமோ மரியாதையோ இருக்காது. காபூலில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் மீது தலிபான்கள் தங்கள் கொடியை உயர்த்தும்போது அது எவ்வளவு அவமான மாக இருக்கும். இது பலவீனம், இயலாமை மற்றும் முழுமையான தோல்வி" என்று கூறினார்.

### ஆப்கானிஸ்தானின் எதிர்காலம் என்ன?

அமெரிக்கப்படைகள், ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேற எடுத்த முடிவு தலிபான்களுக்கு சாதகமாக மாறியுள்ளதாக தெரியவந்துள்ளது. இந்த சூழலில் ஆப்கானிஸ்தானை முழுமையாக கைப்பற்றியுள்ளது தலிபான் படைகள். ஆப்கானிஸ்தானை ஏற்கனவே 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டுவரை தலிபான்கள் ஆட்சி செய்தனர். இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்பான தலிபான்கள், ஆப்கானிஸ்தான் மட்டுமின்றி மேற்கு பாகிஸ்தான் பகுதியிலும் வலுவான நிலையில் உள்ளனர்.


- தலிபான்கள், ஆப்கானிஸ்தான் ஆட்சி பொறுப்பேற்றால் அவர்களின் வெளியுறவு க்கொள்கை என்னவாக இருக்கும்?.
- உலக நாடுகளுடனான தலிபான் அரசின் தொடர்பு எப்படி இருக்கும்?.
- ஐ.நா சபை இந்த ஆட்சியை அங்கீகரிக்குமா?.
- உலக நாடுகள் இந்த அரசை அங்கீகரிக்குமா?
- 20 ஆண்டுகளாக உள்நாட்டு போரால் சிதைந்த ஆப்கானின் பொருளாதாரம் என்னவாகும்?
- பெண்கல்வி எதிர்ப்பு உள்ளிட்ட அடிப்படைவாத கொள்கைகளை பின்பற்றும் தலிபான்களின் ஆட்சியின் மக்களின் நிலை என்னவாக இருக்கும்?
- ஆப்கானிஸ்தானின் எதிர்காலம் என்ன?

என்பன போன்ற பல கேள்விகள் இப்போது எழ தொடங்கியுள்ளது.

சுழியோடி



# தடுப்பூசியே ஒரே வழி – ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரை



சங்கைக்குரிய மஹா சங்கத்தினர்களே. மதத் தலைவர்களே. நண்பர்களே. கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரே வழி தடுப்பூசி ஏற்றுவதேயாகும் என்று. உலக சுகாதார ஸ்தாபனம். வைத்திய நிபுணர்கள் மற்றும் உலகத் தரம்வாய்ந்த வேலைத்திட்டத்தினூடாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதனால் தான். இலங்கைக்குத் தடுப்பூசிகளைக் கொண்டுவருவதற்காக. கடந்த காலங்களில் நான் விசேட ஆர்வம் காட்டியிருந்தேன். சீனா. இந்தியா போன்ற நாடுகளின் தலைவர்களுடன். இது தொடர்பில் தனிப்பட்ட ரீதியில் உரையாடினேன். மேலும் பல நாடுகளின் அரச தலைவர்களுக்கு. நான் தனிப்பட்ட ரீதி யில் கடிதங்களை அனுப்பினேன். தடுப்பூசிகள் தயாரிக்கப்படும் நாடுகளுடன். நமது நாட்டு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாகவும் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் ஊடாகவும் கலந்துரையாடினோம். தடுப்பூசி தயாரிக்கும் நிறுவனங்களை. எமது அதிகாரிகள் நேரடியாகத் தொடர்புகொண்டனர்.

எமது நாட்டைச் சேர்ந்த அனைத்து மக்களுக்கும் தடுப்பூசி ஏற்ற வேண்டுமென்ற என்னுடைய தேவையின் காரணமாகவே. இந்த அனைத்துவித முயற்சிகளையும் மேற்கொண்டேன். இந்த முயற்சிகளின் பலனாகவே. தற்போது ஒவ்வொரு மாதமும். எமக்குத் தேவையான தடுப்பூசிகள். பாரியளவில் கிடைத்துக்கொண்டு இருக்கின்றன. எமக்கு முதன் முதலாக. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அஸ்ட்ரா செனெக்கா தடுப்பூசியே கிடைக்கப்பெற்றது. அதன் பின்னர். சீனா உற்பத்தி செய்த சினோஃபாம் தடுப்பூசி எமக்குக் கிடைக்கப்பெற்றாலும். அந்தத் தடுப்பூசிக்கு. தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் (NMRA) அனுமதி கிடைக்கப்பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக. பொதுமக்களுக்கு அந்தத் தடுப்பூசியைப் பெற்றுக்கொடுக்கும் பணி. சுமார் ஒரு மாதகாலம் தாமதமானது.

எவ்வாறெனினும். இவ்வாண்டு மே மாதம் 8ஆம் திகதி முதல். சினோஃபாம் தடுப்பூசி ஏற்றும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. தவிர. அமெரிக்காவிடம் இருந்து ஃபைசர் மற்றும் மொடர்னா தடுப்பூசிகளும் ஜப்பானிலிருந்து அஸ்ட்ரா செனெக்கா தடுப்பூசிகளும். ரஷ்யாவிலிருந்து ஸ்பூட்னிக் தடுப்பூசிகளும் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதால். தடுப்பூசி ஏற்றும் நாடுகளின் பட்டியலில். நாம் உயர்ந்த இடத்தில் இருக்கிறோம்.

இம்மாதம் 19ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள். ஒரு கோடியே இருபது இலட்சத்து பத்தொன்பது ஆயிரத்து நூற்று தொண்ணூற்று மூன்று (12.019.193) பேருக்கு. முதலாவது அலகு தடுப்பூசியை வழங்கியுள்ளோம். அதே வேளை. ஐம்பத்து ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து நூற்று எண்பத்தைந்து (5.124.185) பேருக்கு. இரண்டாம் அலகுத் தடுப்பூசியை வழங்கியுள்ளோம். தவிர. இரண்டாம் அலகுத் தடுப்பூசியை வழங்குவதற்காக. மேலும் சுமார் மூன்று மில்லியன் தடுப்பூசிகள். கைவசம் எம்மிடம் இருக்கின்றன. இன்னும் மேலதிகமாக மூன்று மில்லியன் தடுப்பூசிகள். இம்மாத இறுதியில் கிடைக்கவுள்ளன. இது வரையில். 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 98 சதவீதமானோருக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதோடு. அவர்களில் 43 சதவீதமானோருக்கு இரண்டாம் அலகுத் தடுப்பூசியும் ஏற்றப்பட்டுள்ளது. ஓகஸ்ட் 31ஆம் திகதிக்குள். 81 சதவீதத்துக்கும் மேற்பட்டோருக்கு. இரண்டாம் அலகுத் தடுப்பூசியை வழங்குவதற்கான இயலுமையும் உள்ளது. செப்டெம்பர் 10ஆம் திகதிக்குள். 100 சதவீதமானோருக்கு இரண்டாம் அலகுத் தடுப்பூசியை வழங்க முடியும்.

அந்த நிலைமையுடன். தொற்றுக்குள்ளாகும் நோயாளிகளின் எண்ணிக்கையும் அதனால் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் குறைவடையும். நாட்டிலுள்ள முன்வரிசைச் சுகாதார ஊழியர்கள். துறைமுகம் உள்ளிட்ட அத்தியாவசியச் சேவையாளர்கள். பாதுகாப்புத் தரப்பினர். தொழிற்சாலைகளின் ஊழியர்களுக்கு. முன்னுரிமை அடிப்படையில் நாம் தடுப்பூசி ஏற்றியுள்ளோம். 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கூட. முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி ஏற்றியுள்ளோம். இதற்கு மேலதிகமாக. 30 வயதுக்குக் குறைந்த சுமார் ஒரு மில்லியன் தொழிற்சாலை ஊழியர்களுக்கும் தடுப்பூசி பெற்றுக் கொடுத்திருக்கிறோம்.

நாடு முழுவதிலும் மகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை விதித்தல். கிராம சேவகர் பிரிவுகளைத் தனிமைப்படுத்தல். ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்தல். அரச சேவையில் அத்தியாவசிய ஊழியர்களை மாத்திரம் சேவைக்கு அழைத்தல். திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகளைத் தடுத்தல். சில வர்த்தக நடவடிக்கைகளை மூடிவிடல். மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்தை நிறுத்துதல். மதஸ்தலங்களில் பொதுமக்கள் கூடுவதைத் தடுத்தல் போன்ற கட்டுப்பாட்டு முறைமைகளைத் தொடர்ந்தும் நாம் அமுல்படுத்தி வருகின்றோம்.

கொவிட் 19 தொற்றுப்பரவல் முதலாம் அலையின் போது நாம் முன்னெடுத்த நடவடிக்கைகள் காரணமாக. அதனை வெற்றிகரமாக முறியடிக்க எம்மால் முடிந்தது. அப்போதைய சந்தர்ப்பத்தில். அது தவிர வேறு வழிகள் இருக்காத பட்சத்திலேயே. அவ்வாறான தீர்க்கமானதொரு தீர்மானத்தை எடுக்க வேண்டி ஏற்பட்டது. அதனால். நாட்டை சில மாதங்களுக்கு முழுமையாக மூட நேர்ந்தது. அவ்வாறான நடவடிக்கைகள் மூலம். முதலாவது அலையைக் கட்டுப்படுத்த முடிந்தது.

நாட்டை நாம் அடிக்கடி மூட நடவடிக்கை எடுத்திருந்தாலும். அதனால் ஏற்பட்ட பக்க விளைவுகளையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். கொரோனா முதலாவது அலை ஏற்பட்ட காலப்பகுதியானது. இந்நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னர் மிகக் குறைந்த பொருளாதார வளர்ச்சியைக் காண்பித்த காலப்பகுதியாகும். விசேடமாக. இலங்கைக்கு சுமார் 5 பில்லியன் அமெரிக்கன் டொலர்களை வருமானமாக ஈட்டித்தந்த ஆடைத் தொழிற்றுறையானது. இதனால் மிகப்பெரிய நட்டத்தை எதிர்கொண்டது. அவர்களுக்கான ஏற்றுமதிக் கட்டளைகள் நிறுத்தப்பட்டன. இதனால். பலருக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் போனது. ஏற்றுமதி வருமானம் இழக்கப்பட்டது. 4.5 பில்லியன் அமெரிக்கன் டொலர்களை வருமான மாகக் கொண்டிருந்த சுமார் 3 மில்லியன் மக்களின் வாழ்வாதாரத்துக்கு வழிவகுத்த சுற்றுலாத்துறையும் முழுமையாக ஸ்தம்பித்தது. இலட்சக்கணக்கான வேலைவாய்ப்புகள் இதனால் இழக்கப்பட்டன. அடிக்கடி முன்னெடுக்கப்பட்ட நாட்டை முடக்கும் செயற்பாடுகள் காரணமாக. நிர்மாணத்துறைத் தொழிற்றுறைகளுக்கும் பாரிய அடி விழுந்தது. அவர்களுக்குத் தேவையானளவில் ஊழியர்களை வரவழைத்து வேலைகளை முன்னெடுக்க முடியாமல் போனது. தேவையான சந்தர்ப்பத்தில். மூலப்பொருட்களைத் தருவித்துக்கொள்ள முடியாமல் போனது.

இந்தத் துறைக்காக நாம் எதிர்பார்த்திருந்த தேசிய மற்றும் சர்வதேச முதலீடுகள் அனைத்தும். கடந்த சுமார் ஒன்றரை வருடக் காலப்பகுதியில் இழக்க நேரிட்டது. எமது தேசிய பொருளாதாரத்துக்கு மேலுமொரு உந்துசக்தியாக. சிறு மற்றும் நடுத்தர வர்த்தக நடவடிக்கைகள் காணப்படுகின்றன. 50 சதவீதத்துக்கும் மேற்பட்டோர். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களும். இந்தக் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலால் பாதிக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து இந்த வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமல் தடைகள் ஏற்படுத்தப்பட்ட காரணத்தால். அந்த நிறுவனங்களுக்கான வருமானங்கள் இழக்கப்பட்டு. அவற்றை நடத்துவதற்காக எடுக்கப்பட்ட கடன்களையும் ஊழியர்களுக்கான ஊதியத்தையும் வழங்க முடியாமல். பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. லீஸிங் முறைமையில் வாகனங்களைக் கொள்வனவு செய்தவர்களால் அதனைச் செலுத்த முடியாமல் போனது. வீட்டுக் கடன் பெற்றவர்களால். அதனையும் திருப்பிச் செலுத்த முடியாமல் போனது.

இவை தவிர. 4.5 மில்லியனுக்கும் அதிகமான சுய தொழில்கள் மற்றும் நாளாந்தம் வருமானத்தைப் பெறுவோரின் வருமான வழிகள் என்பன முழுமையாக இல்லாமல் போயின. இதனால். அவர்களது வாழ்க்கை நிர்க்கதி நிலைமைக்குத் தள்ளப்பட்டது. இந்த அனைத்துவிதத் தடைகளுக்கு மத்தியிலும். மக்களை வாழ வைப்பதற்கான பொறுப்பு எமக்கு இருந்தது. அந்தப் பொறுப்பை நாம் தட்டிக்கழிக்கவில்லை. கொரோனா காரணமாக நாட்டை முடக்கிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும். நாளாந்த வருமானத்தை இழந்து நிர்க்கதிக்கு ஆளான மக்களுக்கு. 5.000 ரூபாய் கொடுப்பனவொன்றை வழங்குவதற்காக. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் 30 பில்லியன் ரூபாயைச் செலவிட்டிருக்கிறோம். இதுவரையில். பல தடவைகள் இந்தச் செலவை அரசாங்கம் எதிர்கொண்டிருக்கிறது.

அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களின் செலவுகளுக்கு மேலதிகமாக. தத்தமது வீடுகளில் தனிமைப்படுத்தலில் ஈடுபட்டுள்ள குடும்பங்களுக்கு. இரண்டு வாரக் காலத்துக்குத் தேவையான சுமார் 10.000 ரூபாய் மதிப்புள்ள நிவாரணப் பொதிகளை வழங்கி வருகிறோம்.

இவ்வாறான இக்கட்டான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும். 1.4 மில்லியனாகக் காணப்படும் அரச ஊழியர்களுக்கான ஊதியத்தைக் குறைக்கவோ கொடுப்பனவுகளைக் கழிக்கவோ இல்லை. எமக்கான அந்நியச் செலாவணி வருமானம் குறைந்த போதிலும். கடன் தவணைகளைத் திருப்பிச் செலுத்த அரசாங்கம் தவறவில்லை. கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்களால் எடுக்கப்பட்டிருந்த கடன்கள் காரணமாக. வருடமொன்றுக்கு நாம். 4 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடன் தவணையாகச் செலுத்த வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம். அவற்றை. உரிய காலத்தில் செலுத்தியும் வருகின்றோம்.

நாட்டை மீண்டும் ஒரு முறை முற்றாக முடக்கினால். இந்நாடு பாரிய பொருளாதாரப் பிரச்சினைக்கு முகங்கொடுக்கும். அது. இந்த நாடு பொறுத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை அல்ல. விசேடமாக. ஏற்றுமதித் தொழிற்றுறையில் ஈடுபட்டிருக்கும் ஆடைத் தொழிற்றுறைக்கு. பாரியளவு ஏற்றுமதிக் கட்டளைகள் கிடைத்துள்ளன. அந்தக் கட்டளைகளை உரிய நேர காலத்துக்கு வழங்க முடியாது போனால். பாரியளவு அந்நியச் செலாவணியை நாம் இழங்க வேண்டிய ஏற்படும்.

அதேபோன்று. வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத்துறையைக் கட்டியெழுப்பவும் நாம் பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். இப்போதைய நிலைமையில். நாளாந்தம் சுமார் 200 சுற்றுலாப் பயணிகள். நாட்டுக்கு வருகை தரும் நிலைமை உருவாகியுள்ளது. நாட்டை முடக்கினால். சுற்றுலாப் பயணிகளை வரவழைப்பதை. மீண்டும் முதலில் இருந்தே ஆரம்பிக்க வேண்டி ஏற்படும். அதேபோன்று. நாளாந்த வருமானம் பெறுவோர். சிறு மற்றும் மத்தியதர வர்த்தக நடவடிக்கைகள். நிறுவனங்கள் போன்றவற்றுக்கு. நாட்டை மூடுவதால் வழங்க வேண்டிய நிவாரணங்களை வழங்குவதிலும். நாட்டின் தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலை காரணமாகச் சிக்கல் ஏற்படும். இந்த நாட்டை முழுமையாக மூடுவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் தொடர்பில் பொதுமக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். இன்று இந்த உலகில் காணப்படும் ஒரு சில நாடுகளைத் தவிர்ந்த. பொருளாதார ரீதியாக வல்லரசுகளாக இருக்கும் நாடுகள் கூட. நாட்டைத் திறந்தே வைத்திருக்கின்றன.

உலகின் சுற்றுலாத்துறை. படிப்படையாக வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது. நாடுகளைத் திறந்து வைத்திருக்கும் அரசாங்கங்கள். இந்தச் சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகின்றன. சிறிய பொருளாதாரத்தைக் கொண்டிருக்கும் எமது நாடும். இந்தச் சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதை விடுத்து. மீண்டும் இந்த நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாகச் சரிவடையச் செய்யும் நிலைமைக்குச் செல்ல முடியாது. இது. மாற்றுக் கருத்தாளர்கள். தொழிற்சங்கங்கள். வைத்தியர்கள். ஏனைய சுகாதார ஊழியர்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் இடம்பெறும் போட்டியோ மோதலோ அல்ல. நாம் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். இது. இந்த முழு உலகமும் எதிர்கொண்டுள்ள தீவிரமான பிரச்சினையாகும். இன்று ஒவ்வொரு நாடும். புதிய பொதுமைப்படுத்தல் முறைமையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. அரசாங்கம் என்ற ரீதியில் நாம் எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் சரியாக எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

தொடரும்...



# பிராந்திய செய்திகள்



## அத்தியவசிய பொருட்களை விநியோகிக்க செய்ய வேண்டியது

எபகனஉபகளஉஒபஒனப தனிமைப்படுத்தல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் அத்தியவசிய பொருட்களை விநியோகிக்க வியாபாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.



அன்று (20) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்தியவசிய பொருட்களை விநியோகிப்பதற்கான அனுமதிப்பத்திரத்தை பொலிஸ் நிலையங்களின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

## கிணற்றுக்குள் குதித்து கர்ப்பிணி பெண் தற்கொலை!

வவுனியாவில் கிணற்றுக்குள் குதித்து தற்கொலைக்கு முயற்சித்த கர்ப்பிணி பெண் மரணமடைந்துள்ளதுடன், பரிசோதனையில் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இன்று இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய கர்ப்பிணி பெண் ஒருவர் கிணற்றுக்குள் குதித்து தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.

இதனையடுத்து கிராம மக்கள் மற்றும் உறவினர்கள் குறித்த பெண்ணை கிணற்றில் இருந்து மீட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்தனர். எனினும் சிகிச்சை பலனின்றி குறித்த கர்ப்பிணிப் பெண் மரணமடைந்தார்.

மரணமடைந்த பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அவருடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

## சாய்ந்தமருதில் சமுர்த்தி குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிப் பத்திரம் வழங்கி வைப்பு

இரண்டு இலட்சம் சமுர்த்தி குடும்பங்களின் மனைப் பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்யும் "சமுர்த்தி அருணலு" வாழ்வாதார அபிவிருத்தி தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிப் பத்திரம் மற்றும் தென்னங் கன்றுகள் வழங்கும் நிகழ்வு சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சீ.எம்.நஜீம் தலைமையில் அன்று (20) வெள்ளிக்கிழமை சமுர்த்தி வங்கியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக், சமுர்த்தி முகாமையாளர்களான ஏ.எல். யூ.ஜுனைதா, எஸ். றிபாயா, யூ.எல்.ஏ கபூர், உதவி முகாமையாளர்களான எம்.எம்.எம். முபாறக், கலாநிதி ஏ.எம்.எம்.றியாத், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட 340 சமுர்த்தி பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிப் பத்திரமும் 50 பேருக்கு தென்னங்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வு சுகாதார வழிமுறைகளை பேணி இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



## ஒரு மாதத்திற்கு போதுமான எரிபொருள் கையிருப்பில் உள்ளது

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஓய்வுபெற்ற ஊழியர் ஒருவர் வெளியிட்ட உண்மைக்கு புறம்பான கூற்றினால் எரிபொருள் நிறப் பகங்களில் சனக்கூட்டத்தை அவதானிக்க முடிந்ததாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் மேலும் ஒரு மாதத்திற்கு போதுமான எரிபொருள் கையிருப்பில் இருப்பதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அவர் தெரிவித்தார்.

இதனால் எவரும் அனாவசியமாக அச்சத்தை ஏற்படுத்தி கொள்ள வேண்டிய தேவை இல்லை என்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.



## வவுனியாவில் மயங்கி விழுந்த இளம் குடும்ப பெண் மரணம்! கொவிட் தொற்று உறுதி

வவுனியா, குருமன்காடு பகுதியில் திடீரென மயங்கி விழுந்த இளம் குடும்ப பெண் மரணமடைந்துள்ளார்.

அன்று இரவு இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா, குருமன்காடு பகுதியில் வசித்து வந்த இளம் குடும்ப பெண் ஒருவர் திடீரென மயங்கி விழுந்துள்ளார்.




இதனையடுத்து உறவினர்கள் உடனடியாக அப் பெண்ணை வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். எனினும், குறித்த பெண் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

35 வயதுடைய பெண்ணே இவ்வாறு மரணமடைந்தவராவார். இந்நிலையில், குறித்த பெண்ணுக்கு மேற்கொண்ட என்டிஜன் பரிசோதனையில் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பஸ் மற்றும் ரயில் சேவைகள் இடம்பெறமாட்டாது

இன்று முதல் எதிர்வரும் 30 ஆம் திகதி வரையில் பொது பஸ் மற்றும் ரயில் சேவைகள் இடம்பெறமாட்டாது என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இருப்பினும் அத்தியாவசிய சேவைகளுக்காக நிறுவனங்களின் கோரிக்கைக்கு அமைவாக அந்த நிறுவனங்களுக்கு மாத்திரம் பஸ்களை வழங்குவதற்கு தயாராக இருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

இதேவேளை நேற்றிரவு 10 மணிமுதல் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமல்படுத்தப்பட்டதை தொடர்ந்து, அனைத்து பொது பஸ் மற்றும் ரயில் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சரக்கு மற்றும் எரிபொருள் கொண்டு செல்லும் 08 ரயில்கள் மாத்திரமே அன்று (21) சேவையில் ஈடுபடும்.

வழமையான பயணிகள் போக்குவரத்துக்காக ரயில்கள் சேவையில் ஈடுபடாதென ரயில்வே பொதுமுகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

சுகாதாரத் துறையினருக்காக விசேட பஸ் போக்குவரத்து முன்னெடுக்கப்படும். துறைமுகங்கள் மற்றும் சுங்கம் உள்ளிட்டவற்றில் தொழில் புரியும் ஊழியர்களுக்காகவும் சில பஸ் போக்குவரத்துகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் பிரதி பொது முகாமையாளர் ஏ.எச். பண்டுக்க ஸ்வர்ண ஹங்ஸ தெரிவித்துள்ளார்.



# சினிமா துளிகள்



## 10 வயது குறைவானவரை இரண்டாவது திருமணம் செய்கிறாரா? பிரபல நடிகை

அஜித்துடன் விஸ்வாசம், விஜய்யுடன் மாஸ்டர் போன்ற படங்களில் நடித்ததன் மூலம் ரசிகர்களிடம் அதிகம் பிரபலமானவர் நடிகை சுரேகா வாணி.

தமிழை தாண்டி தெலுங்கிலும் பிஸியான நடிகையாக வலம் வரும் இவரது கணவர் அண்மையில் தான் உடல்நலக் குறைவால் உயிரிழந்தார்.

இவருக்கு ஒரு மகள் உள்ளார், அவ்வப்போது தனது மகளுடன் நடனம் ஆடுவது, ரீல்ஸ் செய்வது போன்று ஜாலியாக இருக்கிறார்.

இந்த நேரத்தில் தான் சுரேகா வாணி தன்னை விட 10 வயது குறைந்தவரை இரண்டாவது திருமணம் செய்கிறார் என செய்திகள் வர ஆரம்பித்தன.

இதுகுறித்து நடிகை பேசுகையில், தனக்கு இன்னொரு திருமணம் செய்துகொள்ள ஒரு யோசனையும் இல்லை என்றும் தற்போது மகிழ்ச்சியாக இருப்பதாகவும் கூறியுள்ளார்.

இதுபோன்ற வதந்திகளை பரப்ப வேண்டாம் என கடும் கோபமாக தெரிவித்துள்ளார்.



## ஷங்கர் படத்தில் வில்லனாக நடிக்கும் பஹத் பாசில்?

நடிகர் பஹத் பாசில், தற்போது சுகுமார் இயக்கும் புஷ்பா என்கிற தெலுங்கு படத்தில் அல்லு அர்ஜீனுக்கு வில்லனாக நடித்து வருகிறார்.

தமிழ் திரையுலகில் முன்னணி இயக்குனராக வலம் வருபவர் ஷங்கர். இவர் அடுத்ததாக தெலுங்கு நடிகர் ராம்சரண் நடிக்கும் படத்தை இயக்க உள்ளார். தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் இப்படம் உருவாக உள்ளது. பிரம்மாண்ட பட்ஜெட்டில் தயாராகும் இப்படத்தை தில் ராஜீ தயாரிக்கிறார். இப்படத்தில் ராம்சரணுக்கு ஜோடியாக நடிக்க பிரபல பாலிவுட் நடிகை கியாரா அத்வானி ஒப்பந்தமாகி உள்ளார். இப்படத்திற்கு தமன் இசையமைக்க உள்ளார்.

இந்நிலையில், இப்படத்தில் வில்லனாக நடிக்க பிரபல மலையாள நடிகர் பஹத் பாசிலிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. பஹத் பாசில், தற்போது சுகுமார் இயக்கும் புஷ்பா என்கிற தெலுங்கு படத்தில் அல்லு அர்ஜீனுக்கு வில்லனாக நடித்து வருகிறார். ஆதலால், ஷங்கர் படத்திலும் வில்லனாக நடிக்க அவர் சம்மதிப்பார் என டோலிவுட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



## விஜய் சேதுபதி, சந்தானம் நடித்த படங்கள் ஒரே நாளில் ரிலீஸ்



நகைச்சுவை நடிகராக இருந்து ஹீரோவாக உயர்ந்துள்ள சந்தானம், தற்போது நடித்துள்ள 'டிக்கிலோனா' படத்தின் ரிலீஸ் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

நடிகர் சந்தானம் மூன்று வேடங்களில் நடித்துள்ள படம் 'டிக்கிலோனா'. கார்த்திக் யோகி இயக்கியுள்ள இப்படத்தில் சந்தானத்துக்கு ஜோடியாக அனகா மற்றும் ஷிரின் ஆகியோர் நடித்துள்ளார்கள். மேலும் சுழற்பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங்கும் முக்கிய வேடத்தில் நடித்துள்ளார்.

இந்நிலையில், இப்படத்தின் ரிலீஸ் திகதியை படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. அதன்படி வருகிற செப்டம்பர் 10-ந் திகதி விநாயகர் சதுர்த்தியன்று இப்படம் நேரடியாக ஜீ5 ஓடிடி தளத்தில் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நடிகர் சந்தானம் நடித்துள்ள படம் நேரடியாக ஓடிடி-யில் வெளியாவது இதுவே முதன்முறை.

அன்றைய தினம் டெல்லி பிரசாத் தீனதயாளன் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடித்துள்ள துக்ளக் தர்பார் படமும் வெளியிடப்பட உள்ளது. இப்படம் நேரடியாக தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட உள்ளதாக கூறப்படுகிறது. விஜய் சேதுபதி, சந்தானம் நடித்த படங்கள் ஒரே நாளில் ரிலீசாவது இதுவே முதன்முறை.

## ஆயிரத்தில் ஒருவன் படத்தின் உண்மையான பட்ஜெட் இதுதான்?

இயக்குனர் செல்வராகவன் இயக்கிய சில படங்களின் இரண்டாம் பாகம் வரவேண்டும் என ரசிகர்கள் ஆசைப்பட்டார்கள்.

அப்படி ரசிகர்கள் அதிகம் எதிர்ப்பார்ப்பது ஆயிரத்தில் ஒருவன். கார்த்தி, பார்த்திபன், ரீமா சென், ஆண்ட்ரியா என பெரிய நடிகர்கள் பட்டாளமே நடித்தார்கள்.

படத்திற்கான இரண்டாம் பாகம் தயாராக இருப்பதாகவும் தனுஷ் முக்கிய வேடத்தில் நடிக்க இருக்கிறார் என ஏற்கெனவே தகவல் வெளியாகிவிட்டது.

இப்போது திடீரென செல்வராகவன் தனது டுவிட்டர் பக்கத்தில் ஆயிரத்தில் ஒருவன் பற்றி டுவிட் போட்டுள்ளார். அதில் அவர், ஆயிரத்தில் ஒருவன் உண்மையான பட்ஜெட் 18 கோடிகள் ஆனால் இது ஒரு மெகா பட்ஜெட் படமாக மிகைப்படுத்த 32 கோடி படமாக அறிவிக்க முடிவு செய்தோம்.

என்ன முட்டாள்தனம், படம் உண்மையான பட்ஜெட்டை வசூலித்தாலும் அது சராசரியாக கருதப்பட்டது, முரண்பாடுகள் எதுவாக இருந்தாலும் பொய் சொல்லக் கற்றுக்கொள்ளவில்லை என பதிவு செய்துள்ளார்.





# பல்சுவை கதம்பம்



## முகப்பருக்களை நீக்கி பொலிவான தோற்றத்தை தரும் அழகு குறிப்புகள் !!

கற்றாழை ஜெல்லை ரோஸ் வாட்டர் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊறவைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்து வர, முகத்தில் உள்ள கருமை படிப்படியாக முற்றிலும் அகலும்.



கருமையான சிறுசிறு புள்ளிகளானது அதிகமாக வெயிலில் சுற்றுவது, கெமிக்கல், ஹார்மோன் ஏற்றத்தாழ்வு, வைட்டமின் குறைபாடு, மாசுபாடு நிறைந்த சுற்றுச்சூழல், மன அழுத்தம் மற்றும் தூக்கமின்மை போன்றவைகளால் ஏற்படும். இவற்றை எளிமையான சில இயற்கை வழிகளின் மூலம் போக்க முடியும்.

முட்டையின் வெள்ளைக்கருவுடன் தயிரை சேர்த்து நன்கு அடித்து, அவற்றை முகத்தில் தடவி உலரவைத்து கழுவவேண்டும். இப்படி இரண்டு வாரத்திற்கு ஒருமுறை செய்து வர, முகத்தில் இருக்கும் கருமை நீங்கும்.

வெந்தயக் கீரையை அரைத்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி 30 நிமிடம் ஊறவை த்து, நன்கு உலர்ந்ததும் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இப்படி அடிக்கடியோ அல்லது வாரம் 3 முதல் 4 முறையோ செய்து வந்தால், முகத்தில் உள்ள கருமை நீங்கி, முகம் பொலிவோடு காணப்படும்.

எலுமிச்சை சாற்றினை 1%2 டீஸ்பூன் எடுத்துக் கொண்டு, அதில் 1 டீஸ்பூன் தேன் கலந்து, முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும். இதன் மூலம் நல்ல பலன் கிடைக்கும்.

வெங்காயம் மற்றும் பூண்டை சரிசமமாக எடுத்து அரைத்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி 10 நிமிடம் கழித்து கழுவ, முகத்தில் இருக்கும் கருமையான தழும்புகள் மற்றும் புள்ளிகள் மறையும். பாதப

## இளநரையை நீக்கி தலைமுடியை கருப்பாக்கும் குறிப்புகள் !!

2:3 என்ற விகிதத்தில் பாதாம் எண்ணெய் மற்றும் எலுமிச்சை சாறு இரண்டையும் சேர்த்து கலக்கி தலைமுடியில் நன்கு தடவி மசாஜ் செய்யவும். பின்பு அரை மணி நேரம் களித்து முடியை அலசவும். இவ்வாறு செய்து வந்தால் இளநரை குணமாகும்.

தேவையான அளவு நீரை நன்கு கொதிக்கவைத்து அதில் 1 டீஸ்பூன் காபி தூள் சேர்த்து கொதிக்கவிடவும். பின்பு மருதாணி இலையை அரைத்து இந்த நீரில் சேர்த்து குளிரவைக்கவும். சில மணி நேரம் இந்த கலவை நன்கு ஊற வேண்டும். பின்பு இந்த கலவையுடன் 1 டீஸ்பூன் தேங்காய் எண்ணெய் சேர்த்து கலந்து தலையில் தடவிவிட்டு ஒரு மணி நேரம் களைத்து முடியை அலசவும்.

8 துண்டு நெல்லிக்காயை தேங்காய் எண்ணெய்யில் சேர்த்து வேகவைத்து பின்பு அதில் ஒரு டீஸ்பூன் வெந்தயத்தூள் சேர்த்து கிரவிட்டு இறக்கவும். பின்பு அது நன்கு சூடு ஆரிய பிறகு இரவு நேரத்தில் உச்சந்தலையில் சிறிது எண்ணெய் அதிகமாகவே தடவலாம். பின்பு காலை எழுந்தவுடன் சீகைக்காய் பயன்படுத்தி தலைக்கு குளிக்க வேண்டும்.

வெந்தயம், வால்மிளகு, சீரகம் மூன்றையும் சம அளவு பொடி செய்து தேங்காய் எண்ணெயில் கலந்து தேய்த்து வரவும்.

மருதாணி, கறிவேப்பிலை, வேப்பிலை இவை மூன்றையும் பொடி செய்து எண்ணெய்யில் போட்டு உபயோகித்தால் நரைமுடி தடுக்கப்படுவதுடன் முடி கருமையாக வளரும்.



## வறண்ட சருமத்தை போக்கி மிருதுவான பாதங்களை பெற சில வழிகள்

உடலில் நீர்ச்சத்து அதிகம் இல்லாத போது சருமம் வறண்டு, வெடிப்பு ஏற்பட்டு கடினமாக மாறும். இதற்கு வெப்ப நிலையும் காரணமாக இருக்கலாம். அடிக்கடி சருமத்தை கடினமான சோப்கள் பயன்படுத்தி கழுவி கொண்டே இருப்பதாலும் இது ஏற்படலாம்.

நம்மை அழகுபடுத்த பல விதமாக முயற்சி செய்கிறோம். ஆனால் இந்த அழகு படுத்தும் முயற்சியில் முகத்துக்கு மற்றும் தலை முடிக்கு கொடுக்கும் கவனத்தை பாதங்களுக்கு கொடுப் பதில்லை. பாதங்களை பாதுகாப்பதில், அதை வறண்டு போகாமல் இருக்க செய்வது நல்லது.

குளிக்கும் நேரத்தை குறைத்து, 5 முதல் 10 நிமிடங்களுக்கு மேல் குளிக்க வேண்டாம். உங்கள் பாதங்களை அதற்கு மேல் நீரில் ஊற வைக்க வேண்டாம். நீண்ட நேரம் தண்ணீரில் இருக்கும்போது பாதத்தில் இருக்கும் இயற்கையான எண்ணெய் மறைந்து தோல் வறண்டு விடும். சூடான நீரில் குளிக்கும் பழக்கும் வேண்டாம். வெது வெதுப்பான நீரில் குளிப்பதை வழக்கமாக கொள்வோம். சூடான நீர், சருமத்தில் உள்ள அதிகமான எண்ணெயை உரித்து எடுத்து விடும். மேலும் சருமம் கடினமாக மாறும்.

பாதங்களை கழுவியவுடன், காய வைத்து, சிறிதளவு மாய்ஸ்சரைசர் தடவுங்கள். இதனால் கால் பாதங்களுக்கு ஈரப்பதம் கிடைக்கிறது. விரல்களுக்கு இடையில் இதை தடவ வேண்டாம். இவை பாக்டீரியாக்கள் நுழைய வழி வகுக்கும். பாதங்கள் வறண்டு காணப்படும்போது அல்லது பாதங்களுக்கு அதிக அழுத்தம் கொடுக்கும்போது வெடிப்புகள் ஏற்படலாம். இதை தடுக்க, குளிக்கும் போது படிக கல்லை கொண்டு பாதங்களை உரசலாம். இதனால் பாதங்களில் படிந்துள்ள இறந்த செல்கள் மறைந்து விடும். குளித்த பிறகு பாதங்களுக்கு மாய்ஸ்சரைசர் தடவ வேண்டும்.

மழை மற்றும் குளிர் காலங்களில் பாதங்கள் மேலும் வறண்டு காணப்படும். இதனால் பாதிப்பு ஏற்படாமல் இருக்க அடிக்கடி மாய்ஸ்சரைசர் தடவலாம். வறட்சியால் பாதத்தில் அரிப்பு ஏற்படலாம். இதை சொறிவதால் தோலில் வெடிப்பு ஏற்படும். வெடிப்பு, நோய் தொற்றுக்கு வழி வகுக்கும். எண்ணெய் அல்லது கிரீம்களை தடவி கொண்டே இருப்பது அரிப்பை கட்டுப்படுத்தும்.

தினமும் குளித்து முடித்ததும், பாதங்களை ஈரமில்லாதவாறு துணியால் துடைக்க வேண்டும். பின், பாதத்தில் சிறிது விளக்கெண்ணெய் தேய்த்து வந்தாலும் வெடிப்பு வராமல் தடுக்கலாம்.

மருதாணி இலைகளை நன்றாக அரைத்து, பித்த வெடிப்பு உள்ள இடங்களில் தேய்த்து உலர விட வேண்டும். பின், தண்ணீரால் கழுவி வர நாளடைவில் பித்த வெடிப்பு குணமாகும்.

பப்பாளி பழத்தை நன்கு நைசாக அரைத்து, அதை பாதங்களில் வெடிப்பு உள்ள பகுதிகளில் தேய்க்க வேண்டும். அவை உலர்ந்ததும், பாதத்தை தண்ணீரில் நனைத்து மறுபடியும் தேய்க்க வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால், பித்த வெடிப்பு குணமாகும்.





# டக்ளஸ் தேவானந்தாவால் தனது அமைச்சுப்பதவிக்காக திட்டமிட்டு மூடிமறைக்கப்பட்ட அல்லைப்பிட்டி தமிழினப் படுகொலை




டக்ளஸ் தேவானந்தாவால் தனது அமைச்சுப் பதவிக்காக திட்டமிட்டு மூடிமறைக்கப்பட்ட அல்லைப்பிட்டி தமிழினப் படுகொலையும், அதற்காக ஈபிடிபியால் கடத்திக்கொல்லப்பட்ட அருட்தந்தை ஜிம்பிரவுண் அடிகளாரும்.

அல்லைப்பிட்டிப் பங்குத்தந்தையாக நியமிக்கப் பட்டிருந்த அருட்திரு ஜிம் பிறவுண் அடிகளார் தனது உதவியாளருடன் ஞாயிற்றுக்கிழமை ஆகஸ்ட் 20 2006 அன்று யாழ்ப்பாணத்தி லிருந்து அல்லைப்பிட்டிக்குச் சென்றுவிட்டு திரும்பிக் கொண்டிருந்த போது காணாமல் போகச் செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பிற்பகல் 1.45 மணிக்கு அல்லைப்பிட்டி சென்றதற்கான பதிவும், பிற்பகல் 1.50 மணிக்கு அங்கிருந்து திரும்பியதற்கான பதிவும் தம்மிடம் உள்ளதாக பண்ணைப்பாலம் பகுதியில் நிலை கொண்டுள்ள இலங்கை இராணுவத்தினர் தெரிவித்தனர். அதன்பின் அவர் பற்றிய தகவல்கள் தொடர்புடையவர்களுக்கு கிடைக்கவில்லை.

இராணுவத்தினருடன் தொடர்பு கொண்ட போதும் தமக்கு அது பற்றி எதுவும் தெரியாது என்று தெரிவித்தனர். அவர்கள் காணாமல் போனமை பற்றி மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் முறையிடப்பட்டது. முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவர் பங்குத்தந்தை ஜிம் பிறவுண் அடிகளார். பங்குத்தந்தையுடன் சென்றஅவரதுஉதவியாளர்அல்லைப்பிட்டியைச் சேர்ந்தவர் பென்சன் பிளஸ் (வயது 39). அல்லைப்பிட்டிப் பங்குத்தந்தையாக 2004 இல் நியமிக்கப்பட்ட அருட்திரு அந்தோனி அமல தாஸ் அல்லைப்பிட்டியில் 4 மாதக்குழந்தை, 4 வயதுச் சிறுவன் உட்பட 9 பேர் கொடூரமா கப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை வெளியுலகுக்கு கொண்டு வந்தவர்.

பலவித அச்சுறுத்தலால் அவரால் அங்கு தொடர்ந்து பணியாற்ற முடியவில்லை. இதனால் அவர் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டு அவரது இடத்திற்கு அருட்திரு ஜிம் பிறவுண் நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் மண் சாக்குமூடை ஒன்றில் வெட்டப்பட்ட நிலையில் பொதி செய்யப்பட்ட நிலையில் புங்குடுதீவு கடற்கரையில் கடந்த 14ம் நாள் மீட்கப்பட்ட சடலம் ஜிம் பிறவுண் அடிகளாருடையது என கத்தோலிக்க குருமார் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த சடலத்தின் குருதியை கொழும்புக்கு அனுப்பி மரபணு முறைக்கு உட்படுத்துமாறு யாழ் கிறிஸ்தவ குருமார் யாழ் நீதிமன்றத்திடம் வலியுறுத்தியுள்ளனர்.

யாழ் நகருக்குள் இவர்கள் இருவரும் வந்திருந்ததை யாப்பாணக் காவல்துறையி னரால் உறுதிப் படுத்த முடியவில்லை புங்குடு தீவுக் கடற்கரையில் மிகவும் அழுகிய நிலையி ல் மனித உடல் ஒன்றிருந்த மணற்பை ஒன்று 2007, மார்ச் 14 ஆம் நாளன்று கண்டெடு க்கப்பட்டதாக உள்ளூர்ப் பத்திரிகை தகவல் வெளியிட்டிருந்தது.

இவ்வுடல் ஜிம் பிறவுணுடையதென அடை யாளம் காணப்பட்டதாகவும் அப்பத்திரிகை தெரிவித்திருந்தது. ஆனாலும், இவ்வுடலின் மீது மேற்கொள்ளப்பட்ட மரபணுச் சோத னைகள் இந்த உடல் ஜிம் பிறவுறுடையதோ அல்லது விமலதாசின் உடையதோ அல்ல என இலங்கை அரசு அறிவித்தது

இடம்பெயர்ந்து அல்லல்பட்டுக்கொண்டிருந்த மக்களுக்கு அல்லைப்பிட்டி , ஊர்காவற்து றைஎன்று ஓடி ஓடி உதவிக்கொண்டிருந்த அல்லைப்பிட்டி கத்தோலிக்க பங்குத்தந்தை வணக்கத்திற்குரிய திருச்செல்வம் நிகால் ஜிம் பிறவுண் ( வயது 34 ) எனும் நல் உள்ளத்தி னையும் அல்லைப்பிட்டி சோதனை சாவடியில் வைத்து கடற்படையினரும் . ஈபிடிபியினரும் இணைந்துகடத்தி கொன்றதாக ஊடகங்கள் ஆதாரத்துடன் தகவல்கள் வெளியிட்டிருந்தன .

சில நாட்களின் பின்னர் தலையற்ற முண்டமாக ஜிம் பிறவுண் அடிகளாரின் வித்துடல் கடற்கரை யில் மீட்கப்பட்டிருந்தது . இப்படுகொலைகள் தொடர்பாக ஊர்காவற்துறை நீதிமன்றில் நீதிபதி சிறீநிதி நந்தசேகரன் ( இன்றைய மேல் நீதி மன்ற நீதிபதி ) விசாரணைகளைமுன்னெடுத் திருந்தபோதும் கடற்படை . ஈபிடிபியினரின் கொலை மிரட்டல்கள் காரணமாகபொதுமக் கள் சாட்சியமளிக்க முன்வரவில்லையென்று ஊடகங்கள் , பொதுமக்கள் தரப்பினர்குறிப்பி ட்டிருந்தனர்.

**வரலாற்று மீள் நினைவுகளுடன்...**
**ஈழத்தமிழினம்.**

## பொதுமுடக்கம் காரணமாக கிளினிக் மருந்துகள் தபாலகமூடாக விநியோகம் ! மருந்தகங்கள் திறந்துள்ளன !!

நாட்டில் அன்று(2021.08.19) 10 மணிமுதல் அமுலுக்கு வந்துள்ள பொதுமுடக்கம் காரணமாக பொதுமக்கள் வெளியில் நடமாட முடியாத சூழ்நிலை எழுந்துள்ளது. இதனால் நீண்டகால நோய்வாய்ப்பட்டோர், கிளினிக் மூலம் மருந்துகளை பெறுவோ ரின் நன்மைகருதி தபால் திணைக்கள தபாலகங்கள் ஊடக மருந்துகள் விநியோகிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் தபால் திணைக்கள கடுகதி சேவை யும் இடம்பெற்று வரு கின்றது.

அம்பாறை மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மக்கள் முழுமையாக கடைப்பிடித்து வருகின்றனர். அன்று 21 காலையில் பிர தான நகரங்கள் உட்பட கரையோர பிரதேசங்களில் உள்ள முக்கிய கேந்திர ஸ்தானங்கள் மற்றும் வீதிகள் அனைத்தும் முற்றாக வெறிச்சோடி காணப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தினால் விடுக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மதித்து மக்கள் வீடுகளில் முடங்கி உள்ளதுடன் அத்தியவசிய சேவை வழமைபோன்று இயங்கிவருவதுடன் மருந்தகங்கள் திறந்துள்ளதை காண முடிகிறது.





## புதிய முறைமையின் கீழ் இன்று முதல் கொவிட் தொற்றாளர்களுக்கு சிகிச்சை

புதிய முறைமையின் கீழ் இன்று முதல் கொவிட் தொற்றாளர்களுக்கு சிகிச்சை

கொரோனா நோயாளர்களின் நோய் தன்மைக்கு ஏற்ப அவர்களை வகைப்படுத்தி சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்புதல் மற்றும் வீடுகளில் வைத்து முகாமை செய்தல் ஆகியவற்றுக்காக மேல் மாகாணத்தை உள்ளடக்கும் வகையில் புதிய முறைமை ஒன்று கொவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய இன்று முதல் அமுலாகும் வகையில் துரித அழைப்பு மற்றும் குறுந்தகவல் சேவை முறைமை ஒன்று செயற்படுத்தப்பட உள்ளது.

சுவாசக் கோளாறுகளை கொண்டுள்ள நோயாளர்கள் யு எனவும் காய்ச்சல் கொண்டுள்ள நோயாளர்கள் டீ எனவும் எவ்வித நோய் அறிகுறிகளும் கொண்டிராத நபர்கள் ஊ எனவும் குறிப்பிட்டு சிறிய இடைவெளிவிட்டு வயது (இடைவெளி) தேசிய அடையாள அட்டை எண் (இடைவெளி) முகவரி என்பவற்றை உள்ளீடு செய்து 1904 இலக்கத்துக்கு குறுந்தகவல் அனுப்பி வைக்க முடியும். கிடைக்கப்பெறும் தகவல்களுக்கு அமைய கொவிட் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம், நோயாளர்களை சிகிச்சை மையங்களுக்கு அனுப்புவது தொடர்பில் மருத்துவர்களுக்கு அறிவிக்கும் என அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.



## ஒலிம்பிக் பதக்கத்தை வென்ற ஐந்தே நாள்களில் ஏலம் விட்ட வீராங்கனை

டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா தங்கம் வென்ற ஈட்டி எறிதல் விளையாட்டில் பெண்கள் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்றவர் மரியா ஆண்ட்ரேஜிக். பதக்கம் வென்ற ஐந்தே நாட்களில் இவர் ஏன் பதக்கத்தை ஏலம் விட்டார்?

ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளும் ஒவ்வொரு வீரர்களும் பதக்கம் வெல்வதற்காக, தங்கள் சுக, துக்கங்களை மறந்து பதக்கம் ஒன்றையே லட்சியமாக கொண்டு பல வருடங்களாக பயிற்சி செய்கிறார்கள். ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்வது ஒன்றும் அவ்வுளவு எளிதல்லவே. கோடியில் ஒருவருக்கே அது சாத்தியம். ஒலிம்பிக் போட்டியில் ஒரு பதக்கம் வெல்ல மாட்டோமா என பல நாடுகள் ஏங்கி தவிக்கின்றன. இன்னும் சில நாடுகளுக்கு ஒலிம்பிக் பதக்கம் வெல்வது இன்றுவரை வெறும் கனவாகவே இருக்கிறது. இப்படி பெருமை வாய்ந்த ஒலிம்பிக் பதக்கத்தை, அரும்பாடுபட்டு வென்ற பதக்கத்தை யாராவது விற்க துணிவார்களா? "நான் விற்பேன்" என செய்துகாட்டியிருக்கிறார் போலந்து நாட்டு வீராங்கனை.

போலந்தைச் சேர்ந்த மரியா ஆண்ட்ரேஜிக்குக்கு வயது 25. இளம் வயதிலேயே ஈட்டி எறிதலில் பல சாதனைகள் படைத்த மரியா 2016 ரியோ ஒலிம்பிக்கில் இரண்டு சென்டி மீட்டர் வித்தியாசத்தில் வெண்கலப் பதக்கத்தை தவற விட்டார். மயிரிழையில் பதக்கத்தை தவறவிட்டருக்கு அதிர்ச்சிமேல் அதிர்ச்சி காத்திருந்தது. ஒலிம்பிக் முடிந்ததும் தோள்பட்டை காயம் காரணமாக பல போட்டிகளில் பங்கேற்க முடியாமல் தவித்தவருக்கு பேரதிர்ச்சி. 2018-ம் ஆண்டு எலும்பு புற்றுநோயால் பாதிக்கப்பட்டார் மரியா. ஆனால், அவர் நம்பிக்கையை கைவிடவில்லை.

தொடர் சிகிச்சையால் புற்றுநோயிலிருந்து மீண்டு, டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்ட மரியா, 64.61மீ தூரம் வீசி ஈட்டி எறிதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றார். இவரின் முதல் ஒலிம்பிக் பதக்கம் இது. நான்கு ஆண்டு இடைவெளிகளில் பதக்கத்தை தவறிவிட்டு, கேன்சரில் இருந்து மீண்டும் வெள்ளிப்பதக்கம் வென்று சாதனைப்படைத்த இந்த சாதனைப் பெண் கருணையின் மறு உருவம்.

கடந்த சில நாட்களுக்கு முன் பிறந்து எட்டு மாதமே ஆன மிலோசெக் மலிசா என்ற ஆண் குழந்தையின் இருதய சிகிச்சைக்கு உடனடியாக பணம் தேவைப்படுவதை ஃபேஸ்புக் மூலம் அறிந்திருக்கிறார் மரியா. இந்தக் குழந்தையை அவர் நேரில் பார்த்தது கிடையாது. ஆனாலும், தன்னுடைய நாட்டு குழந்தைக்கு தானும் ஏதாவது உதவி செய்வோம் என நினைத்த மரியா, ஒலிம்பிக் போட்டியில் தான் வென்ற வெள்ளிப் பதக்கத்தை ஏலம் விட முடிவு செய்தார். அதில் கிடைக்கும் தொகையை மருத்துவ



சிகிச்சைக்கு தர முன்வந்தார். அப்போது அவர் டோக்கியோவில் பதக்கம் வென்று வெறும் ஐந்து நாட்களே ஆகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

சிகிச்சைக்காக அமெரிக்கா செல்லவும் மருத்துவ செலவுக்கும் தோராயமாக 3,85,000 அமெரிக்க டொலர் தேவைப்பட்டது. இந்திய ரூபாய் மதிப்பில் கிட்டத்தட்ட 3 கோடி. இதில் பாதிக்கும் மேற்பட்ட தொகையை குழந்தையின் பெற்றோர்கள் ஆன்லைன் மூலம் திரட்டி விட்டனர். மீதமுள்ள தொகையை தன் பதக்கத்தை ஏலம் விடுவதன் மூலம் திரட்டலாம் என குழந்தையின் பெற்றோருக்கு நம்பிக்கை கொடுத்திருக்கிறார் மரியா. புற்றுநோயில் இருந்து மீண்ட மரியாவுக்கு அந்தப் பெற்றோர்களின் வலி புரிந்திருக்கிறது.

"பதக்கத்தின் உண்மையான மதிப்பு என்றும் என் நெஞ்சில் இருக்கும். பதக்கம் என்பது வெறும் பொருள் தானே. ஆனால், அது பலருக்கு மதிப்பு வாய்ந்தது. என்னுடைய வீட்டில் இருந்து தூசி அடைவதை விட இந்த வெள்ளிப் பதக்கம் ஒரு உயிரை காப்பாற்றட்டுமே. அதனால்தான் நோய்வாய்பட்ட குழந்தையின் உயிரைக் காப்பாற்ற இதை ஏலத்தில் விட முடிவு செய்தேன்" என விளக்கம் தந்து பதக்கத்தை ஏலத்தில் விட்டார் மரியா.

போலந்து நாட்டைச் சேர்ந்த Zabka எனும் சூப்பர்மார்க்கெட் நிறுவனம் 1,25,000 அமெரிக்க டொலர் செலுத்தி ஏலத்தில் வென்றிருக்கிறது. இதைக் கடந்த திங்களன்று தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அறிவித்தார் மரியா. இதன்மூலம் குழந்தையின் மருத்துவ செலவுக்கான தொகையும் கிடைத்துவிட்டதாக தன்னுடைய சந்தோஷத்தை பகிர்ந்து கொண்டார். இதில் ஆச்சரியப்படத்தக்க விஷயம் என்னவென்றால், ஏலத்தில் வென்ற நிறுவனம் வெள்ளிப் பதக்கத்தை மீண்டும் மரியாவிடமே கொடுத்துவிட்டது. "மரியாவின் மனிதநேயத்தை நாங்கள் மனதார பாராட்டுகிறோம். டோக்கியோவில் வென்ற அவரது வெள்ளிப் பதக்கம் என்றும் அவரிடமே இருக்கட்டும்" என சொல்லியிருக்கிறது Zabka நிறுவனம். ஒரு உயிருக்கு முன் ஒலிம்பிக் பதக்கம் ஒன்றும் பெரிதல்ல என்று உலகுக்கு உணர்த்திய இந்த போலிஷ் வீராங்கனை, மனிதநேயத்தில் உயர்ந்து நிற்கிறார். - விகடன்

## பிரித்தானியாவின் பல பகுதிகளுக்கு மஞ்சள் எச்சரிக்கை

இங்கிலாந்தின் பெரும்பாலான பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை முன்னறிவிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். அதன்படி, கனமழை மற்றும் இடியுடன் கூடிய மஞ்சள் எச்சரிக்கை வானிலை மையத்தால் விடுக்கப்பட்டுள்ளது. சில பகுதிகளில் 40 மில்லி மீற்றர் வரை மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மஞ்சள் எச்சரிக்கை சனிக்கிழமை மதியத்திலிருந்து இரவு 10 மணி வரை நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக இங்கிலாந்து, வேல்ஸ் மற்றும் வடக்கு அயர்லாந்தில் வெள்ளம், மின்வெட்டு மற்றும் பயண இடையூறு ஏற்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அடுத்த வாரம் இங்கிலாந்தில் வெயில் காலநிலையுடன் நிலைமைகள் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதாவது,

"இரவு மற்றும் காலை நேரங்களில் மழை பெய்யும், அதிகாலையில் கனமழை மற்றும் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. பிற்பகலுக்குள் இவை மிகவும் பரவலாகி, ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதுடன் ஒரு மணி நேரத்திற்குள் 20 மில்லி மீற்றர் மழை பெய்யக் கூடும் என தெரிவித்துள்ளது.

மேலும் மின்னல் மற்றும் ஆலங்கட்டி சில இடங்களில் கூடுதல் அபாயங்களை ஏற்படுத்தக்கூடும் எனவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.






## இந்தியர்களுக்கு கனடா வெளியிட்டுள்ள தகவல்

கொரோனா பரிசோதனை செய்து, பாதிப்பு இல்லை என்ற சான்றிதழுடன் வரும் இந்தியர்களை மட்டுமே, கனடா அரசு அனுமதி அளித்துள்ளது.

இந்தியா - கனடா இடையே நேரடி விமான போக்குவரத்துக்கான தடை, செப்.30 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்தியாவில் இருந்து வேறு நாட்டிற்குச் சென்று, அங்கு கொரோனா பரிசோதனை செய்து, பாதிப்பு இல்லை என்ற சான்றிதழுடன் வரும் இந்தியர்களை மட்டுமே, கனடா அரசு அனுமதி அளித்துள்ளது.

இதனால், கனடாவில் படிக்கச் செல்லும் இந்திய மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து, கனடா பல்கலையில் படிக்கும் இந்திய மாணவி லரினா குமார் கூறியதாவது, கனடா அரசின் கடுமையான விதிமுறையால், இந்தியாவில் இருந்து துபாய் சென்று, அங்கிருந்து ஸ்பெயின், மெக்சிகோ சென்று, அதன் பின் தான் கனடா செல்லும் நிலை உள்ளது. இதனால், கனடா பயணச் செலவு, 1.50 லட்சத்தில் இருந்து, 5 லட்சம் ரூபாயாக உயர்ந்து விட்டது. மேலும், வெளிநாட்டில் இரு நாட்கள் தங்கி கொரோனா சான்றிதழ் வாங்குவது கடும் அலைச்சலாக உள்ளது.



# அறிவியல் உலகம்




## வழுக்கைத் தலைக்கு ஊசி வைத்தியம்

தலைமுடி வளர்ச்சி குறைந்து, பின் சுத்தமாக வழுக்கையாகிவிடும் குறைபாட்டுக்கு, சீன விஞ்ஞானிகள் தீர்வு கண்டுபிடித்துள்ளனர்.தலை வழுக்கைக்கு இரண்டு முக்கிய காரணங்கள் உண்டு. முதலாவது, முடிக் கால்களில் நச்சுகள் சேர்வது.

இரண்டாவது, முடிகளின் வேர்ப்பகுதிகளுக்கு போதிய நல்ல ரத்த ஓட்டம் இல்லாமல் இருப்பது.இவற்றைப் போக்க, சீனாவிலுள்ள ஜெஜியாங் பல்கலை விஞ்ஞானிகள், தலைமுடியின் வேர்ப்பகுதியில் நேரடியாக மருந்து செலுத்தும் முறையை உருவாக்கியுள்ளனர். விரைவில் கரையக்கூடிய தன்மையுள்ள 'நேனோ' ஊசி முனைகளைக் கொண்ட பிளாஸ்திரி பட்டையை அவர்கள் உருவாக்கினர். அதில், சீரியம் போன்ற சில மருந்துகளை ஏற்றி, வழுக்கையாகி வரும் தோல் பகுதியில் நேரடியாகவே ஒட்டினர். இதனால், நேரடியாகவே முடியின் வேர்ப்பகுதியில் மருந்துகளை செலுத்த முடிந்தது.

பிளாஸ்திரியிலுள்ள ஊசிகளில் மருந்தை செலுத்தியதும், தோல் பகுதியிலேயே அவை கரைந்து, மறைந்து விடும். நேரடியாகவே மருந்து செலுத்துவதால், அந்த இடத்தில் நச்சுகள் விலக்கப்படு கின்றன. மேலும், சீரான நல்ல ரத்த ஓட்டம் பாய்வதற்கும் வழி கிடைக்கிறது. இதனால் முடி வளர்ச்சி மீண்டும் தூண்டப்பட்டு, வழுக்கை விழுந்த இடத்தில் அடர்த்தியாக முடி வளர்கிறது.இந்த ஊசி மருந்து, சோதனை எலிகளின் மீது தான் நடத்தப்பட்டது. என்றாலும், இது மனிதர்களுக்கும் நல்ல பலன் அளிக்கும் என, ஜெஜியாங் பல்கலை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



## தண்ணீரில் கரையும் கடிகாரம்



பயன்படுத்திய பின், தண்ணீரில் கரைந்துவிடும் மின்னணு உதிரி பாகங்களை சீனாவிலுள்ள டியான்ஜின் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தயாரித்துள்ளனர்.

இந்த புதிய முறையில் தயாரித்த மின்னணு பொருட்கள், தண்ணீரில் 40 மணி நேரத்திற்குள் முற்றிலும் கரைந்து மாயமாகிவிடும். டியான்ஜின் ஆராய்ச்சியாளர்கள், எளிதில் மட்கி விடும் தன்மையுள்ள பாலிவினைல் ஆல்கஹால், துத்தநாகம் மற்றும் வெள்ளி நேனோ கம்பிகள் போன்ற பொருட்களை வைத்து ஒரு கைக் கடிகாரம் ஒன்றை தயாரித்தனர்.

குறுகிய கால பயனை மனதில் வைத்து தயாரித்த இந்த கடிகாரத்தின் பாகங்கள், வியர்வையின் ஈரத்திற்கு கரையாமல் இயங்கியது. ஆனால், தண்ணீரில் விரைந்து கரைந்துவிட்டது.

இதுபோன்ற மின்னணு பொருட்கள், சில ஆண்டுகள் நீடிக்கும்படி தயாரிக்க முடிந்தால், மின்னணு கழிவுகள் என்ற சிக்கலுக்கே இடமில்லாமல் போய்விடும் என டியான்ஜின் விஞ்ஞானிகள் கூறு கின்றனர்.

உலகில், மின்னணு குப்பை பெரும் சவாலாக ஆகிவரும் நிலையில், இத்தகைய புதுமைகள் நிச்சயம் நல்ல தீர்வாக அமையும். மறுசுழற்சியைவிட மேம்பட்ட தீர்வு இது என்றே சொல்லலாம்.

## 'டைல்ஸ்' ஆகும் முட்டை ஓடுகள்!

சுண்ணாம்புக் காரையில் முட்டைகளை கலந்து பூசி, சுவர்களை பளபளக்க வைத்தது காரைக்குடி கட்டடக் கலை. பிரிட்டனைச் சேர்ந்த 'நேச்சர் ஸ்கொயர்டு' நிறுவனம், வீணா-கும் முட்டை ஓடுகளைச் சேகரித்து, சுவர்களில் பதிக்கும் தட்டை ஓடுகளை தயாரிக்கும் முறையை உருவாக்கி உள்ளது.'கேரெலி' என்ற வர்த்தகப் பெயரில் வரும் இந்த ஓடுகளை, பிலிப்பைன்சிலுள்ள தொழிற்சாலையில் உற்பத்தி செய்கிறது நேச்சர் ஸ்கொயர்டு. பிலிப்பைன்சிலுள்ள உணவகங்கள், அடுமனைகளில் வீணாகும் முட்டை ஓடுகளை வாங்கி வந்து, தூய்மைப்படுத்தி, பொடியாக்கி, வண்ணங்களை சேகரித்து நவீன ரசனைக் கேற்ற டைல்ஸ்களாக மாற்றுகிறது. ஒரு சதுர மீட்டர் சுவர் ஓடுகளைத் தயாரிக்க 3,000 முட்டை ஓடுகள் தேவைப்படுவதாக நேச்சர் ஸ்கொயர்டின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். முட்டையின் தயவில் உருவான கேரெலி சுவர் ஓடுகள், குளியலறை, சமையலறை உள்ளிட்ட சுவர்களிலும் ஈரத்தைத் தாங்கும் வகையில் உள்ளன. நகர குப்பை மேடுகளில் குவிய நேரிடும் முட்டை ஓடுகளுக்கு, வீடுகளின் சுவர்களை அலங்கரிக்கும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது.




## படத்தில் பிடிபட்ட வாசனை உணரிகள்!

ஐந்து புலன்களில், மிகவும் குறைவாக ஆராயப்பட்டது எது தெரியுமா? மூக்கு தான். வாசனைகளை அறியும் உணர்வுக்கு ஆதாரமாக இருக்கும் உணரிகள் பற்றிய பல புதிர்கள் இன்னும் விடுவிக்கப்படாமலேயே உள்ளன.இந்த நிலையில், முதல் முறையாக வாசனையை அறியும் உணர்வான்கள் வேலைசெய்யும் விதத்தை ஆராய்ச்சியாளர்கள் படம்பிடித்துள்ளனர்.அமெரிக்காவின் ராக்பெல்லர் பல்கலை விஞ்ஞானிகள், கிரையோ எலக்ட்ரான் நுண்ணோக்கியைக் கொண்டு, ஒரு பூச்சியின் வாசனை உணரிகளை படம்பிடித்துள்ளனர்.மனித மூக்கில் வாசனைகளை உணர, குறைந்தது 400 வகை உணரிகள் மூக்கில் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இவை இயங்கும் விதம் இன்னும் ஆய்வுக்குரியதாகவே உள்ளது. எனவே தான், வெறும் ஐந்தே வாசனை உணரிகளைக் கொண்ட ஒரு பூச்சியினை விஞ்ஞானிகள் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டனர். பூச்சியின் வாசனை உணரிகளை ஆராய்ந்து, உயிரினங்களின் வாசனை உணர்தல் என்ற அற்புதத்தின் மர்மங்களை அவர்கள் விரைவில் விடுவிப்பர் என நம்பலாம்.



## குண்டு துளைக்காத சங்கிலி கவசம்!

ஹாலிவுட்டின் பேட்மேன் பிகின்ஸ் படத்தில், பேட்மேன் அணிந்து வரும் உடை தொள தொளவென இருக்கும். அவர் மாடியிலிருந்து குதிக்கையில், அதே துணி திடீரென விரிந்து, விறைப்பாகி இறக்கை போல மாறிவிடும்.இது போலவே ஒரு துணியை தயாரித்து அசத்தியுள்ளனர் இரு நாட்டு விஞ்ஞானிகள். சிங்கப்பூரின் நான்யாங் பல்கலை மற்றும் அமெரிக்காவின் கலிபோர்னியா தொழில்நுட்பப் பல்கலை விஞ்ஞானிகள் தான் அதை சாதித்தவர்கள்.அந்தக் காலத்தில் போரில் தற்காத்துக் கொள்ள சங்கிலி உடைக் கவசம் பயன்பட்டது. அதை இந்த கால முப்பரிமாண அச்சு இயந்திரத்தைப் பயன்படுத்தி விஞ்ஞானிகள் இந்த வினோதமான உடையை நெய்துள்ளனர்.முதலில் நைலானில் சிறிய சங்கிலிகள் செய்து அவற்றை ஒரு துணி போல பின்னி, ஒரு பிளாஸ்டிக் பையில் வைத்து வெற்றிடத்தை உருவாக்கினர்.இந்த சங்கிலித் துணி மீது அதிக அழுத்தத்தை உண்டாக்கும் போது, இளக்கமான நைலான் சங்கிலிகள், விறைப்படைந்து, பல மடங்கு எடையைத்தாங்கும் அளவுக்கு பலம் பெற்றன.இதே போல, முப்பரிமாண அச்சு இயந்திரத்தில் அலுமினிய சங்கிலித் துணியை விஞ்ஞானிகள் உருவாக்கினர். இந்த சங்கிலீத் துணியும் அழுத்தத்திற்கு ஆளானபோது, இளகிய நிலையிலிருந்து, இறுகிய நிலைக்கு மாறிவிடும். இளகிய நிலையிலிருந்து இறுக்கத்திற்கு, வேண்டியபோது மாறும் துணி வகை, பல பயன்களைத் தரும். விண்வெளி, மருத்துவம், பாலங்கள் என பல துறைகளில் இந்தத் துணிக்கு தேவை உள்ளதாக 'நேச்சர்' இதழ் தெரிவித்துள்ளது.



# விளையாட்டு செய்திகள்

## மீண்டும் களமிறங்கும் தமிழக வீரர் நடராஜன்! ஐபிஎல் தொடரில் விளையாடுவது உறுதி!

தமிழக வீரர் நடராஜன் விரைவில் ஹைதராபாத் அணியுடன் இணைந்து ஐபிஎல்லில் விளையாட இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்தாண்டு ஐபிஎல் மற்றும் ஆஸ்திரேலிய தொடர்கள் நடராஜனுக்கு சிறப்பாகவே அமைந்தது. அதன்பின்பு ஐபிஎல் தொடரில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்காக விளையாடிய நடராஜன் கால் மூட்டில் ஏற்பட்ட காயம் காரணமாக அவதிப்பட்டார்.

இதனால் ஐபிஎல் தொடரில் இருந்து விலகிய அவர் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டார். இப்போது பெங்களூருவில் இருக்கும் தேசிய கிரிக்கெட் அகாடெமியில் மருத்துவர்களின் கண்காணிப்பில் மெல்ல தன்னுடைய பயிற்சிகளை மேற்கொண்டு வந்தார் நடராஜன்.

சில மாதங்களுக்கு முன்பு அவர் அளித்தப் பேட்டியில் ஐபிஎல்லில் விளையாட பயிற்சி எடுத்து வருவதாக கூறினார். இந்நிலையில் ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி அமீரகம் புறப்படுகிறது.

அதில் நடராஜனும் செல்வதாக அந்த அணியின் உயர் அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார். இதனால் காயத்தில் இருந்து மீண்ட நடராஜன் ஐபிஎல்லில் மீண்டும் விளையாடுவது உறுதியுள்ளது.

இந்த தகவலானது ரசிகர்களை மகிழ்ச்சியிலும், உற்சாகத்திலும் ஆழ்த்தியுள்ளது.




## மனைவியுடன் லண்டன் உணவகத்தில் சாப்பிட்ட கோலி!

விராட் கோலியும், அவர் மனைவி அனுஷ்கா சர்மாவும் லண்டனில் உள்ள ஒரு உணவகத்துக்கு சென்று மதிய உணவு சாப்பிட்ட நிலையில் அங்கு தம்பதி எடுத்து கொண்ட புகைப்படம் வைரலாகியுள்ளது.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் இந்தியா பங்கேற்றுள்ளது. இந்திய அணி கேப்டன் விராட் கோலியுடன் அவர் மனைவி நடிகை அனுஷ்கா சர்மா மற்றும் மகள் வமிகாவும் அங்கு சென்றுள்ளனர்.

இந்த நிலையில் லண்டனில் உள்ள டெண்ட்ரில் கிட்சன் என்ற உணவகத்தில் கோலி  அனுஷ்கா தம்பதி மதிய உணவு சாப்பிட்டனர்.

அப்போது அவர்கள் இருவரும் சமையல் கலைஞர் ரிஷிம் சச்தேவாவுடன் எடுத்து கொண்ட புகைப்படம் சமூகவலைதளத்தில் வைரலாகியுள்ளது.

அதில் முக்கிய விடயம் என்னவென்றால் அந்த புகைப்படத்தில் அனுஷ்கா சர்மா அணிந்திருந்த உடைகள், காது தோடுகள், மாஸ்க், கையில் வைத்திருக்கும் பேக் என எல்லாம் சேர்த்தால் அதன் விலை ரூ 1 லட்சத்துக்கும் அதிகமாக இருக்குமாம்.



## டி20 உலகக்கோப்பைக்கு இவர் வேண்டும்! அடம் பிடிக்கும் பாகிஸ்தான் கேப்டன்

பாகிஸ்தான் அணிக்கான டி20 உலகக்கோப்பை அணியில், சோயிப் மாலிக் வேண்டும் என்று பாபர் அசாம் விரும்புவதாகவும், ஆனால் அதை அணி தேர்வு குழுவினர் விரும்பவில்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது.

உலக கிரிக்கெட் ரசிகர்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்த 7-வது உலகக்கோப்பை டி20 தொடர் வரும் அக்டோபர் மாதம் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறவுள்ளது.

இதற்காக அனைத்து சர்வதேச அணிகளும், தரமான அணியை உலககோப்பைக்கு அனுப்ப வேண்டும் என்பதற்காக, கடந்த சில மாதங்களாக வீரர்களின் தேர்வை நடத்தி வருகிறது.

அந்த வகையில் இந்த உலகக்கோப்பை டி20 தொடருக்கான அணியை நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் அறிவித்துவிட்டதால், அடுத்தடுத்து விரைவில் அனைத்து அணிகளும் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான வேலைபாடுகளில் பாகிஸ்தான் தீவிரமாக செயல்பட்டு வருகிறது. ஆனால் பாகிஸ்தான் அணியின் கேப்டன் ஆன பாபர் அசாம், இந்த உலகக்கோப்பை டி20 தொடருக்கு, சீனியர் வீரரான சோயிப் மாலிக் வேண்டும் என்று கேட்கிறார்.

ஏனெனில் பாகிஸ்தான் அணியில் மிடில் ஆர்டர் அந்தளவிற்கு உறுதியாக இல்லை. சோயிப் மாலிக் வந்தால், அந்த இடம் இன்னும் கொஞ்சம் உறுதியாகும்.

குறிப்பாக மாலிக் சமீபத்தில் நடந்து முடிந்தீயமளைவயெ ஸரிநச டுயபரந 2021 மற்றும் முயளா-அசைீசநஅநைச டுயபரந தொடர்களில் அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ஸ்ட்ரைக் ரேட் 150-க்கும் மேல் வைத்துள்ளார். அதுவே பாபர் அசாம் அவரை அணிக்கு கேட்க காரணம்.

ஆனால் அணி தேர்வாளர்களில் ஒருவரான முன்னாள் வீரர் ஆழாயஅயன றுயளைஅ இதுக்கு உடன்படவில்லை என்று அங்கிருக்கும் தகவல்கள் கூறுகின்றன.

ஏனெனில் சோயிப்மாலிக்கிற்கு தற்போது 39 வயதாகிறது. அவர் டி20 ஒரு சர்வதேச அணிகளுடன் விளையாடும் போது, செட் ஆவாரா? என்பது அவருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதால், பாகிஸ்தான் அணியில் இப்போது டி20 உலகக்கோப்பை அணிக்கான வீரர்களை அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டு வருவதாக கூறப்படுகிறது.



## கோலியை எச்சரிக்கும் பாகிஸ்தான் கேப்டன்!

பாகிஸ்தான் அணியின் கேப்டன் பாபர் அசாம், டி20 கோப்பையில் விளையாடவுள்ள இந்தியா மற்றும் பிற அணிகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் பேசியுள்ளார். ஐசிசி நடத்தும் 7-வது டி20 உலகக்கோப்பை தொடர் அக்டோபர் மாதம் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறவுள்ளது. இதற்கு முன்னர் இங்கு ஐபிஎல் தொடர் நடைபெறவுள்ளதால், அனைத்து வெளிநாட்டு வீரர்களும் இதில் கலந்து கொள்ள வேண்டும் என்று ஆர்வமுடன் உள்ளனர். ஏனெனில் ஐபிஎல் தொடரில் விளையாடுவதன் மூலம் மைதானத்தின் தன்மையை நன்கு புரிந்து கொள்ள இது உதவும் என்று முன்னணி வீரர்கள் பலரும் கூறி வருகின்றனர். இந்நிலையில், பாகிஸ்தான் அணியின் கேப்டன் ஆன, பாபர் அசாம் டி20 உலகக்கோப்பை தொடரில் விளையாடும் இந்தியா மற்றும் பிற அணிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதில், ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெறவிருக்கும் டி 20 உலகக் கோப்பை, எங்களுக்கு உள்நாட்டு தொடர் போன்றது. இங்கு நாங்கள் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக விளையாடி வருகிறோம். சொல்லப்போனால் இது எங்களுடைய ஹோம் கிரவுண்ட் மாதிரி, நாங்கள் எங்கள் திறமைகளை எல்லாம் அதிகம் வளர்த்துக் கொண்டது, இங்கு தான். இதன் காரணமாக எங்கள் அணி வீரர்கள் இந்த உலகக்கோப்பை தொடரை மிகவும் ஆர்வமுடன் எதிர்நோக்கி காத்துக் கொண்டிருக்கின்றனர். மேலும் இந்த தொடர் மூலம், நாங்கள் எங்கள் திறமையை வெளிப்படுத்தவும், எங்கள் மேன்மையை மீண்டும் நிலைநாட்டவும் ஒரு வாய்ப்பாக கருதுறோம். எங்களுக்கு மிகவும் பொருத்தமான சூழ்நிலைகளில் விளையாடவுள்ளோம் என்று கூறியுள்ளார். பாகிஸ்தான் அணி உலகக்கோப்பை தொடருக்கான சூப்பர் 12-ல் குரூப் 2-வில் உள்ளது. இதில் நியூசிலாந்து, ஆப்கானிஸ்தான், இந்தியா போன்ற அணிகள் உள்ளது குறிப்பிடத்தக்கது.



# உலக பார்வை



## நிலநடுக்கம்–சுனாமி எச்சரிக்கை விடுத்த அமெரிக்கா

திடீரென உணரப்பட்ட பயங்கரமான நிலநடுக்கத்தை தொடர்ந்து சுனாமி தாக்கும் அபாயம் இருப்பதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஓசியானியா கண்டத்தில் Vanuatu என்ற தீவு அமைந்துள்ளது. அந்தத் தீவில் திடிரென மிகவும் பயங்கரமான நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவில் 6.8 ஆக பதிவாகி உள்ளது. இந்த பயங்காரமான நிலநடுக்கத்தினை தொடர்ந்து சுனாமி ஏற்படும் அபாயம் இருப்பதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



இதனால் அப்பகுதி மக்கள் பீதியடைந்துள்ளனர். மேலும் இந்த நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தற்போது வரை எந்த வித தகவலும் வெளியாகவில்லை. இதேபோல் கடந்த 14 ஆம் திகதி ஹைதி தீவிலும் மிகவும் பயங்கரமான நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 7.2 ஆக பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

இந்த பயங்கரமான நிலநடுக்கத்தினால் 1941 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் படுகாயமடைந்த 8000க்கும் அதிகமானோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

## அவுஸ்திரேலிய தூதரகத்தை முற்றுகையிட்ட ஆப்கான் மக்கள்!

இந்தியாவின் தலைநகர் டில்லியில் உள்ள அவுஸ்திரேலிய தூதரகம் 3,000 ஆப்கான் மக்களுக்கு விசா வழங்க தயாராக இருப்பதாக தகவல் வெளியானதை தொடர்ந்து டில்லியில் உள்ள நூற்று க்கணக்கான ஆப்கான் மக்கள் விசா பெறுவதற்காக அங்குள்ள அவுஸ்திரேலிய தூதரகம் முன் குவிந்துள்ளனர். ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றி உள்ள ஆப்கான் மக்களிடையே பதற்றம் நிலவுவதுடன், ஆயிரக்கணக்கான மக்கள் ஆப்கானிலிருந்து வெளியேறி வருகின்றனர்.

இந்தியா உட்பட உலகம் முழுவதும் பல நாடுகளில் படிப்பதற்காகவும், தொழில் செய்வதற்காகவும் சென்ற ஆப்கானிஸ்தான் மக்கள் சொந்த நாடு திரும்ப முடியாத நிலையில் உள்ளதனால் அவர்கள் வேறு நாடுகளில் குடியேற முயன்று வருகின்றனர்.



ஆப்கானிஸ்தான் அகதிகளுக்கு அடைக்கலம் தருவதாக கனடா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் அறிவித்துள்ளதனால் இந்த நாடுகளில் குடியேற ஆப்கான் மக்கள் தயாராகி வருகின்றனர்.

இந்நிலையில் டில்லியில் உள்ள அவுஸ்திரேலிய தூதரகம் 3,000 ஆப்கான் மக்களுக்கு விசா வழங்க தயாராக இருப்பதாக தகவல் வெளியானது. இதனால் டில்லியில் உள்ள ஆப்கான் மக்கள் நூற்றுக்கணக்கானோர், விசா பெறுவதற்காக ஆஸ்திரேலிய தூதரகம் முன்பு குவிந்தனர்.

இதேவேளை அவர்கள் , ஆப்கான் அகதிகள் என்பதற்கான ஒப்புதலை ஐ.நா., அளிக்க வேண்டும் என அவுஸ்திரேலியா வலியுறுத்தியுள்ளது. இதன் காரணமாக ஐ.நா..வின் ஒப்புதல் கடிதம் பெற ஆப்கான் அகதிகள் முயன்று வருவது குறிப்பிடத்தக்கது.

## நிலநடுக்கம்..பலி எண்ணிக்கை 2189 ஆக உயர்வு

கரீபியன் தீவுகளில் ஒன்றான ஹைதியில் கடந்த ஞாயிற்று கிழமை காலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 7.2 ஆக பதிவானது. இந்த நிலநடுக்கத்தினால் பல கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாயின. இதனால், மக்கள் பலர் கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கி கொண்டனர். இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களில் பலர் உயிரிழந்தனர்.



இந்நிலையில், ஹைதியில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2 ஆயிரத்தை கடந்துள்ளது. நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணி க்கை 2,189 ஆக அதிகரித்துள்ளது என ஹைதி அரசு தெரிவித்துள்ளது. மேலும், 300-க்கும் மேற்பட்டோர் மாயமாகியுள்ளதால் அவர்களை தேடும் பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இதனால், பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. இதற்கிடையில், இந்த நிலநடுக்கத்தில் 1 லட்சத்திற்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்துள்ளன.

30 ஆயிரம் குடும்பங்கள் வீடுகளை இழந்துள்ளன. மேலும், நிலநடுக்கத்தால் 12,268 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் பெரும்பாலானோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்ற அச்சம் நிலவி வருகிறது.

## நான் பணம் எடுத்து சென்றதாக கூறப்படுவது முற்றிலும் பொய்

ஆப்கானிஸ்தானில் இருந்து தப்பி சென்ற பின் முதல் முறையாக அதிபர் அஷ்ரப் கனி காணொளி மூலம் தன்னை பற்றிய செய்தியை வெளியிட்டு உள்ளார்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் வெளியேறியதை தொடர்ந்து, அங்கு தலீபான் பயங்கரவாதிகளுக்கும், அந்நாட்டு அரசுக்கும் இடையிலான போர் தீவிரமான நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தலீபான்கள் தலைநகர் காபூலை கைப்பற்றினர். இதனை தொடர்ந்து 20 ஆண்டுகளுக்கு பின்னர் ஆப்கானிஸ்தான் மீண்டும் தலீபான்கள் வசமானது. தலீபான்கள் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்ததும் அந்த நாட்டின் அதிபர் அஷ்ரப் கனி தனது பதவியை ராஜினாமா செய்து விட்டு நாட்டை விட்டு தப்பி ஓடினார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (AV,) மனிதாபிமான அடிப்படையில் அஷ்ரப் கனியையும் அவரது குடும்பத்தினரையும் ஏற்றுக்கொண்டதாக கூறப்படுகிறது. அவர் நாட்டை விட்டு வெளியேறும் போது மூட்டை மூட்டையாக பணத்தை அள்ளிச்சென்றதாக தகவல் வெளியானது. தப்பி செல்வ தற்காக விமானப்படை தளத்துக்கு 4 கார்கள் நிறைய பணத்துடன் வந்த அவர், அங்கிருந்து ஹெலிகாப்டரில் தப்பி சென்றார். 4 கார்களில் கொண்டு வரப்பட்ட பணத்தை ஹெலிகாப்டரில் திணித்தனர்.

ஆனால் ஒரு அளவுக்கு மேல் அவர்களால் பணத்தை ஹெலிகாப்டருக்குள் ஏற்ற முடியவில்லை. எனவே கொஞ்சம் பணக்கட்டுகளை ஹெலிகாப்டர் நிறுத்தப்பட்டிருந்த ஓடு தளத்திலேயே வீசி விட்டு அஷ்ரப் கனி தப்பி சென்றதாக ரஷிய செய்தி நிறுவனம் ஒன்று தகவல் தெரிவித்து இருந்தது. ஆனால் அஷ்ரப் கனி ஒரு காணொளி செய்தியில் தனது மவுனத்தைக் கலைத்து உள்ளார். ஆப்கானிஸ்தானில் இருந்து தப்பி சென்ற பின் முதல் முறையாக அவர் வீடியோ மூலம் தன்னை பற்றிய செய்தியை வெளியிட்டு உள்ளார். துபாயில் இருந்து முகநூலில் வெளியிட்ட காணொளி செய்தியில் அவர் பேரழிவுகளைத் தவிர்ப்பதற்காக ஐக்கிய அரபு எமிரேட்சில் இருப்பதாகவும், நாடு திரும்ப "பேச்சுவார்த்தையில்" ஈடுபட்டு இருப்பதாகவும் கூறி உள்ளார். மேலும் அவர் கூறும் போது காபூலில் தங்கியிருந்தால் பெரிய வன்முறையை சந்திக்க வேண்டியதிருக்கும். தலீபா ன்களுக்கு எதிராக போராடிய ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு படைகளுக்கு நன்றி. தலீபான்களுடன் ஆப்கானிஸ்தான் அரசாங்கம் நடத்திய பேச்சுவார்த்தைகள் எந்த முடிவையும் எட்டவில்லை. இது எங்கள் தோல்வி என்று அவர் கூறினார். தலீபானுக்கு அதிகாரத்தை அமைதியாக மாற்ற விரும்பி னேன் ஆனால் எனது விருப்பத்திற்கு மாறாக ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேற்றப்பட்டேன் என கூறினார்.நான்கு கார்கள் மற்றும் ஒரு ஹெலிகாப்டர் முழுவதும் பணத்துடன் சென்றதாக கூறப்படும் குற்றச்சாட்டை மறுத்து உள்ளார். நான் பணம் கொண்டுவந்ததாக கூறப்படும் வதந் திகள் முற்றிலும் ஆதாரமற்றவை. அவை பொய் நாட்டின் தலைவராக எனக்கு அச்சுறுத்தல் உள்ளது என கூறினார்.



## சீனாவில் 46 பேருக்கு புதிதாக கொரோனா தொற்று

உலகில் முதன் முதலாக சீனாவில் கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதியில் கொரோனா தொற்று கண்டறியப்பட்டது.

தற்போது அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் கொரோனாவுடன் போராடிக் கொண்டிருக்க, சீனா கொரோனாவை கட்டுக்குள் கொண்டுவந்துவிட்டது. இந்த நிலையில் சீனாவில் மீண்டும் கொரோனா தலைக்காட்டத் துவங்கியுள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் சீனாவில் புதிதாக 46 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.




அன்று 28 பேருக்கு தொற்று உறுதியானதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும் அறிகுறி இல்லாத தொற்று பாதிப்புகளை உறுதி செய்யப்பட்ட பாதிப்பாக சீன சுகாதாரத்துறை அறிவிப்பதில்லை. அந்த வகையில் 30 பேருக்கு அறிகுறி இல்லாத கொரோனா தொற்று உறுதியாகியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்த புதிய பாதிப்புகளின் மூலம் சீனாவில் இதுவரை கொரோனா பாதித்தவர்களின் எண்ணிக்கை 94,546 ஆக உயர்ந்துள்ளது. அதே சமயம் கொரோனாவால் அங்கு இதுவரை 4,636 பேர் உயிரிழந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# உலகின் மழைக் காடுகள்

உலகின் மழைக்காடுகள் பற்றிப் பார்ப்போம். மழைக்காடுகள் அதிகளவு ஆக்ஸிஜனை வழங்குவதால் உலகின் நுரையீரல் என்று அழைக்கப்படுகின்றன. இவை சுற்றுச்சூழலுக்கு அவசியமான முக்கியமான உயிர்தொகுதியாக உள்ளன. உலகின் *50* சதவீத உயிரினங்கள் இக்காடுகளில் காணப்படுகின்றன.

வானிலை மற்றும் சுற்றுச்சூழலின் வெப்பநிலை கட்டுப்பாட்டாளர்களாக மழைக்காடுகள் விளங்குகின்றன. தற்போது காடுகள் அழிப்பு உள்ளிட்ட மனித நடவடிக்கைகளால் மழைக்காடு மட்டுமன்றி அதிலுள்ள விலங்குகளும் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகின்றன.





## அமேசான் மழைக்காடு



அமேசான் மழைக்காடு *55,00,000* சதுர கிலோமீட்டர் பரப்பினைக் கொண்டு மழைக்காடு பட்டியலில் முதலிடத்தைப் பெறுகிறது. இது வெப்ப மண்டல மழைக்காடு வகையினைச் சார்ந்தது. இது பிரேசில், பெரு, கொலம்பியா, வெனிசுலா, ஈகுவடார், பொலிவியா, கயானா, சுரிநேம், பிரெஞ்சு கயானா உள்ளிட்ட தென்அமெரிக்க நாடுகளில், அமேசான் நதியின் வடிநிலப் பகுதிகளில் காணப்படுகிறது. இக்காட்டின் *60*சதவீதம் பிரேசிலில் காணப்படுகிறது.

இக்காட்டில் *16,000* இனங்களாக பகுக்கப்பட்ட சுமார் *390* பில்லியன் மரங்கள் காணப்படுகின்றன. இங்குள்ள உயிரினங்களில் *2.5* மில்லியன் பூச்சிகள், *2000* வகையான பாலூட்டிகள் மற்றும் பறவைகள், பல்லாயிரக்கணக்கான தாவரங்கள் அடங்கும். இன்றுவரை இப்பிராந்தியத்தில் பொருளாதார மற்றும் சமூக ஆர்வமுள்ள *4,38,000* வகையான தாவரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இன்னும் பல கண்டுபிடிக்கப்பட உள்ளன. சிறுத்தைப் புலி, மலையரிமா, அனகோன்டா, எலட்ரிக் ஈல், பிரானா, விஷத்தவளைகள், ஏராளமான ஒட்டுண்ணிகள், குருதியுண்ணும் வௌவால் உள்ளிட்ட உயிரினங்கள் காணப்படுகின்றன.

## கொங்கோ மழைகீகாடு



17.80.000 சதுர கிலோமீட்டர்பரப்பினைக் கொண்ட காங்கோ மழைக்காடு வெப்ப மண்டல மழைக்காட்டினைச் சார்ந்தது. காமரூன். காபோன். ரிபப்ளிக் ஆப் காங்கோ. டெமாக்ரேடிவ் ரிபப்ளிக் ஆப் காங்கோ. மத்திய ஆப்ரிக்கன் ரிபப்ளிக். எக்குவடோரியல் கினியா ஆகிய ஆறு ஆப்பிரிக்க நாடுகளில் பரவிக் காணப்படுகிறது. ஆறுகள். காடுகள். சவன்னா புல்வெளி. சதுப்பு நிலம் மற்றும் வெள்ளம் சூழ்ந்த வனப்பகுதி ஆகியவை இதில் அடக்கம். இக்காடுகள் அதன் உயிர்பல்லுயிரியலுக்காக பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேற்பட்ட மர இனங்கள் மற்றும் 10.000 விலங்கு இனங்கள் காணப்படுகின்றன. யானை. கொரில்லா. சிம்பன்சி. ஓகாப்பி மற்றும் சிங்கம் ஆகியவை முக்கியமானவை ஆகும்.



## வால்டிவியன் மித வெப்ப மண்டல மழைக்காடு

2.48.100 சதுர கிலோமீட்டர் பரப்பினைக் கொண்டு வால்டிவியன் மித வெப்ப மண்டல மழைக்காடு தென் அமெரிக்காவின் தென்மேற்கு பகுதிகளில் உள்ள சிலி, அர்ஜென்டினா பகுதிகளில் காணப்படுகிறது. ஆஞ்சியோஸ்பெர்ம் மரங்கள், மூங்கில், பன்னம், பைன் போன்ற கூம்பு மரங்கள், குறுகிய கடலோர கீற்றுகள், பனிக்கட்டிகள், பனிப்பாறைகள் மற்றும் ஒரு மத்திய பள்ளத்தாக்கு ஆகியவை இக்காட்டை சிறப்பிக்கின்றன.

இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 22.08.2021 அன்று வெளியிடப்பட்டது.